நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
ஆகஸ்டு 2018 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

அலுவலக நிர்வாகம்
சூலூர் பன்னீர்செல்வம்
இரா.செந்தில்
ந. அய்யனார்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# மக்கள் பேராதரவோடு நடந்த பரப்புரை

'கல்வி – நமது உரிமை; வேலை வாய்ப்பு – நமது வாழ்வு; சுயமரியாதை – நமது அடையாளம்' என்ற முழக்கங்களுடன் திராவிடர் விடுதலைக் கழகம் 7 நாட்கள் நடத்திய பரப்புரை இயக்கத்துக்கு (2018 ஆக.20 முதல் 26 வரை) மக்கள் பேராதரவை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆக. 26, 2018இல் பெரம்பலூரில் நடந்த நிறைவு விழா மாநாட்டில் பயணக் குழு பொறுப்பாளர்கள் பரப்புரைக்குக் கிடைத்த ஆதரவையும் 'நீட்' தேர்வு நீக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் காட்டிய உறுதியையும் பகிர்ந்து கொண்டார்கள்.

மனுசாஸ்திரத்தைக் காட்டி பார்ப்பனர்கள் பெரும்பான்மை மக்களை 'சூத்திரர்'களாக்கி அதன் வழியாக கல்வி, வேலை வாய்ப்புகளைப் பறித்து வந்ததை எதிர்த்து சமூகநீதிக்கான போராட்டம் வலிமையாக நடந்தது தமிழ்நாட்டில்தான். நீதிக்கட்சி ஆட்சி காலங்களிலே 'சுதந்திரத்துக்கு' முன்பே தொடங்கிய இந்தப் போராட்டம், பார்ப்பனர்களால் எதிர்க்கப்பட்டாலும், நீதிமன்றங்கள் வழியாக தடைபட்டாலும், தடைகளைத் தகர்த்து முன்னேறியது.

கடவுள்–மத நம்பிக்கையாளர்களும் கல்விக்கான முக்கியத்துவத்தை உணர்ந்தனர். விளிம்பு நிலை மக்களும் தங்கள் பிள்ளைகளின் கல்விக்கே முன்னுரிமை தந்தனர். இந்த சமூக நீதிக்கான உரிமை தமிழ்நாட்டின் சமூகப் பண்பாடாகவே மாறி நிற்கிறது என்பதுதான் தமிழ்நாட்டின் தனித்துவம். இந்தப் பண்பாட்டுப் புரட்சிக்கு 'சுயமரியாதை' என்ற உணர்வு உந்து சக்தியாக இருந்தது.

''சுயமரியாதை என்கின்ற ஒரு என்ஜினைப் பயன்படுத்தி சரியாக ஓட்டத் தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்து விட்டால் பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டு வந்து அதோடு இணைத்து தோல்பட்டையை மாட்டி விட்டாலும் அது தானாகவே ஓடும்.'' ('குடிஅரசு' 17.2.1929) என்றார் பெரியார். தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட 'நீட்'டும் தமிழர் வேலை வாய்ப்பு உரிமைகளைப் பறித்து, வடநாட்டுக்காரர்களுக்கு தாரை வார்க்கும் நடுவண் அரசின் முயற்சிகளும் தமிழர் சுயமரியாதைக்கு எதிரானது. எனவேதான் இந்தக் கோரிக்கைகளை சுயமரியாதையோடு நாம் இணைத்தோம்.

'நீட்' தேர்வுக்கு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத எதிர்ப்பு தமிழகத்தில் மட்டும் தான் வெடித்துக் கிளம்பியது. தமிழக சட்டமன்றத்தில் மட்டும்தான் 'நீட் தேர்வு வேண்டாம்' என்ற ஒருமித்தத் தீர்மானம் நிறைவேறியது.

இந்த நிலையில் 'நீட்'டிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குக் கோரி மீண்டும் ஒரு முறை தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பெரம்பலூரில் நிகழ்ந்த நிறைவு விழா மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் முன் வைத்த கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். 'நீட்' எதிர்ப்புக்கான போராட்டத்துக்கு இது மேலும் வலிமை சேர்க்கும் என்று நம்புகிறோம்.

பயணக் குழுவில் தொடர்ந்து ஒரு வார காலம் காலை முதல் இரவு வரை பயணித்து, மக்களிடம் சமூகநீதியை எடுத்துச் சென்ற கழகத் தோழர்களை பாராட்டி மகிழ்கிறோம்.


உமர் காலித்

*"இந்தியாவில்
நான் எங்கு சென்றாலும்
எனக்கு எதிரான முழக்கங்களையே
கேட்க முடியும்; எதிர்ப்பு
பதாகைகளைக் காண நேரிடுகிறது.
ஆனால்,
விமான நிலையத்தில் இருந்து
இந்த அரங்கத்திற்கு வரும்வரை
அப்படி எதையும் இங்கு
நான் எதிர்கொள்ளவில்லை.
இது பெரியார் மண்ணல்லவா?"
– உமர் காலித்*

# உமர் காலித்தை ஆர்.எஸ்.எஸ். கொல்லத் துடிப்பதேன்?

**செந்தில்**

ஒன்றுக்கு ஒன்று தொடர்புடைய இரண்டு நிகழ்ச்சிகள் ஆக. 13, 2018 அன்று நடந்தன.

முதலாவது ஆக. 13, 2018 மதியம் இந்நாட்டின் தலைநகர் தில்லியில் மையப் பகுதியில் இருக்கும் அரசமைப்பு மன்றம் என்று அழைக்கப்படும் இடத்தின் வளாகத்தில் நாடறிந்த மாணவ செயற்பாட்டாளர் தோழர் உமர் காலித்தை அடையாளம் தெரியாத ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முயற்சித்தார். பின்புறமாக இருந்து அவரைத் தாக்க முயல உமர் நிலைதடுமாறிப் போனார். அந்த ஆள் உமர் காலித்தைச் சுடக் குறி வைத்து அவர் வயிற்றில் துப்பாக்கியை வைத்தார். உமர் காலித் இதை உணர்ந்து கொண்டு அவரைத் தள்ளினார். அக்கணத்தில் அவருடன் இருந்த தோழர்கள் காலித் சயிஃபி, சாரிக் உசைன், பனோஜ் யோட்சனா லாஹிரி அவரைத் தள்ளி விட்டனர். அவர் அங்கிருந்து ஓடத் தொடங்கினார். அவரை சாரிக் உசைன் விரட்டிப் பிடிக்கப் பார்த்தார். அந்நேரம் அவர் குறியின்றி ஒருமுறை சுடவும் செய்தார். ஆனால் சாரிக் மீது அது படவில்லை. நாடாளுமன்றத்தில் இருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ள அந்தப் பாதுகாப்பு வளையப் பகுதியில் இருந்து அந்த ஆள் தப்பிவிட்டார். சுதந்திர தினத்திற்கு இரு நாட்களுக்குமுன் என்பதால் அப்பகுதி வழக்கத்தை விட உயர்பாதுகாப்பில் இருந்த தாகும். பின்னர் நாடாளுமன்ற வீதி காவல் நிலையத்திற்கு சென்று உமர் காலித் ஒரு புகார் தந்துள்ளார்.

இரண்டாவது இந்த செய்தி முகநூலில் வந்து பரபரத்துக்

கொண்டிருந்த வேளையில் தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையில் உள்ள மெரினா காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளரிடம் இருந்து என் தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. "கடந்த ஆண்டு நீங்கள் நடத்திய காந்தி சிலைப் போராட்டம் தொடர்பாக உங்களுக்கு ஒரு சம்மன் தர வேண்டியிருக்கிறது" என்றார். எனக்கு விசயம் புரிந்தது. அவரிடம் இருந்து சம்மனைப் பெற்றுக்கொண்டேன். கடந்த ஆண்டு அக்டோபர் 2 காந்திப் பிறந்த நாள் அன்று "காந்தியைக் கொன்றவர்களே கௌரியைக் கொன்றார்கள்" என்ற பதாகைகளுடன் காந்தி சிலையை நோக்கிச் சென்ற நாங்கள் அப்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோம். ஏனெனில் அன்றிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு செப்டம்பர் 5 ஆம் நாள்தான் பத்திரிக்கை ஆசிரியரும் அரசியல் செயற்பாட்டளருமான கௌரி லங்கேஷ் அடையாளம் தெரியாத நபர்களால் அவர் வீட்டு வாசலிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இரத்த வெள்ளத்தில் மிதந்தார். 2015 ஆகஸ்ட் 30இல் வட கர்நாடகாவில் பகுத்தறிவுவாதியும் வரலாற்று ஆய்வாளருமான எம்.எம்.கல்புர்கி (77), 2015 பிப்ரவரி 16இல் பகுத்தறிவுவாதியும் இடதுசாரி சிந்தனையாளருமான கோவிந்த பன்சாரே(81), 2013 ஆகஸ்ட் 20இல் பகுத்தறிவாளரும் மருத்துவருமான நரேந்திர தபோல்கர் (52) ஆகியோரைச் சுட்டுக் கொல்லப் பயன்படுத்திய அதே துப்பாக்கிதான் கௌரியையும் சுடுவதற்கு பயன்படுத்தப்பட்டதாகும். அது 7.65 மி.மீட்டர் நாட்டுத் துப்பாக்கியாகும். சங் பரிவார் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கௌரியின் மரணத்தைக் கொண்டாடினார்கள். 'கௌரி தேச விரோதி' என்ற ஊடகப் பரப்புரையில் குழம்பிப் போயிருக்கும் இந்நாட்டு மக்களுக்கு ஓர் உண்மையை உரத்துச் சொல்வதற்காக நாடெங்கும் ஒரு வேலை திட்டமிடப்பட்டது. "காந்தியைக் கொன்றவர்கள்தான் கௌரியைக் கொன்றார்கள்" என்ற முழக்கத்துடன் காந்தி சிலை முன்பு திரண்டு மாலை அணிவிப்போம் எனவும் குருதிதாகம் அடங்காத ஆர்.எஸ்.எஸ். தோட்டாக்களால் அதுவரை கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வோம் எனவும் முடிவு செய்யப்பட்டது. 2017, அக். 2 அன்று தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்களில் இதை செய்ய முடிந்தது. ஆனால், தமிழ்நாட்டிலோ பா.ச.க.வின் எடுபிடி அரசின் காவல்துறை அங்கு போவதற்கே அனுமதி மறுத்தது. அதை மீறி நாங்கள் சென்றோம். 'மௌனமாக நீங்கள் காந்தி சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டும்' என்றது காவல்துறை. அதை மீறி நாங்கள் முழக்கமிட்டோம். காந்தி சிலைக்கு சில அடிகள் முன்பு கூடியிருந்த நாங்கள் குண்டாங் கட்டாக காவல் வாகனத்திற்குள் தூக்கியெறியப்பட்டோம். அதே மெரினா சாலையில் இருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் வீ.அரசு அங்கிருந்தார். கவிஞர் மனுஷ்யபுத்திரன் அங்கிருந்தார். இந்த சமூக தகுநிலையை ஒத்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், படைப்பாளிகள், செயற்பாட்டாளர்கள் அங்கிருந்தனர். ஆனால், இவர்களெல்லோரும் எவ்வித வேறுபாடுமின்றி காவல்துறையால் கரடுமுரடாகக் கையாளப்பட்டு மண்டபத்தில் அடைக்கப் பட்டனர். பெங்களூருவிலோ, பூனேவிலோ, தில்லியிலோ யாரை வேண்டுமானாலும் கொல்ல ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு எவ்வித தடையுமில்லை. ஆனால், இந்த உண்மையைச் சொல்வதற்குகூட நமக்கு தடை விதித்து தடுக்க முயன்றது காவல்துறை. ஆர்.எஸ்.எஸ். விரும்பாத ஓர் உண்மையை இந்நாட்டு மக்களிடம் உரக்கச் சொல்ல முயன்ற குற்றத்திற்காகத்தான் இந்த சம்மன் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 16 அன்று எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புத் தரப்பட்டுள்ளது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், அதன் தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆகியோரும் இதே 'குற்றத்திற்காக' நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தலைநகரிலும் சென்னையின் தலைநகரிலும் நடந்த இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையவை; உறுதியாக தற்செயலானவை. ஆனால், காவி-கார்ப்பரேட்களின் சர்வாதிகார ஆட்சியின் செயல்முறையில் மிக நேர்த்தியாக கோர்க்கப்பட்ட சங்கிலியாகும். ஒரு சித்தாந்தப் போர் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. அதில் தமக்கு எதிரான சித்தாந்தத்தைக் கொண்

டவர்களை ஆர்.எஸ்.எஸ். சகித்துக் கொள்வதில்லை. சட்டத்தின் பெயரால் காவல்துறை மிரட்டலாலும் பொய் வழக்குகளாலும் மக்களின் வாயை அடைத்துவிடுவது. இதையும் மீறி துணிந்து பேசுவர்கள் யாராயினும் அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு தடையாக வருபவர்கள் யாராயினும் அவர்களை 'முடித்து விட' ஆர்.எஸ்.எஸ். தயங்குவதில்லை. இந்து காந்தியோ, லிங்காயத் கல்புர்கியோ, கம்யூனிஸ்ட் உமரோ யாராயினும் அவர்களுக்கு பொருட்டல்ல. அவர்களுக்கு மரணத்தைப் பரிசாக தருகின்றனர். காக்கிகளின் வழியாக சட்டமும் காவிகளின் வழியாக சட்ட விரோதமும் கைகோர்தப்படி சர்வாதிகார ஆட்சி இந்நாட்டில் எப்படி நடக்கிறது என்பதை விளக்குவதற்கு தில்லியில் நடந்த கொலை முயற்சியும் சென்னையில் பதியப்பட்ட வழக்கும் போதுமானதாகும்.



'நாங்கள் பாரதத் தாயின் தவப்புதல்வர்கள்; எமர்ஜென்சியை எதிர்த்துப் போராடிய சனநாயக காவலர்கள்'; இந்தியாவை வல்லரசாக்குவோம்' என்பவர்கள், இந்து மதத்தைக் குத்தகைக்கு எடுத்தவர்கள், புண்ணிய நாட்டின் பெருமையில் மயங்கிக் கிடப்பவர்கள் கௌரிகளை, உமர் காலித்களை கொல்லத் துடிப்பதேன்? எனப் பேசித்தான் ஆக வேண்டி யுள்ளது.

தேநீர் அருந்திவிட்டு தன் நண்பர்களுடன் அந்த வளாகத்திற்குள்ளே வந்து கொண்டிருந்த உமர் காலித் ஒருவேளை வெற்றிகரமாக கொல்லப்பட்டிருந்தால் இரண்டு விதமான செய்திகள் உலா வந்திருக்கும். ஒன்று, ஓர் இளம் மாணவ செயற்பாட்டாளர் கொல்லப்பட்டார் என ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகமும் நாடெங்கும் உள்ள சனநாயகப் பற்றாளர்களும் கலங்கி நின்றிருப்பர். மற்றொன்று, ஒரு 'தேச விரோதி', 'நக்சல்' நாட்டின் தலைநகரத்தில் நாயைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டான் என்று சங் பரிவாரங்கள் கொண்டாடியிருக்கும்.

இவர் தேச விரோதியான கதை என்ன? உமர் காலித் ஜே.என்.யூ பல்கலைக் கழகத்தின் ஆய்வு மாணவர். 2011இல் நடந்த நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு 2013இல் தூக்கில் போடப்பட்ட காஷ்மீரைச் சேர்ந்த அப்சல் குருவுக்கு 2016இல் ஜே.என்.யூ வளாகத்தில் நினைவுக்கூட்டம் நடத்தப்படுகிறது. அந்த கூட்டத்தில் பங்குபெற்ற முன்னணியாளர்களான கன்னையா குமார், உமர் காலித், அனிர்பன் பட்டாச்சார்யா ஆகியோர் மீது தேச துரோக வழக்குப் பதியப்படுகிறது. "இந்தியாவின் ஒற்றுமைக்கு எதிராக முழக்கமிட்டவர்கள்" என்பது இவர்கள் மீதான குற்றச்சாட்டு. இது நாடெங்கும் விவாதப் பொருளானது. 'தேச விரோதிகள் யார்? தேசப் பற்றாளர்கள் யார்?' என்ற காரசாரமான பட்டிமன்றம் நடந்தது. இவர்களுக்கு சங் பரிவார கும்பல்களால் கொலை மிரட்டல் விடப்பட்டது. ஆனால், இவர்கள் பின்வாங்கி விடவில்லை. பொய்ப் புனைவுகளால் வழி நடத்தப்படும் இந்தியாவின் இன்றைய இருண்ட நாட்களில் உண்மையெனும் அகல் விளக்கோடு இவர்கள் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உமர் காலித் தமிழ்நாட்டிற்கு அறிமுகமானவர்தான். 'ரெசிஸ்ட்' அமைப்பு 'துப்பாக்கிகளும் கற்களும்' என்ற தலைப்பில் காஷ்மீர் போராட்டம் பற்றி நடத்திய கருத்தரங்கில் உரையாற்ற வந்திருந்தார் உமர் காலித். "இந்தியாவில் நான் எங்கு சென்றாலும் எனக்கு எதிரான முழக்கங்களைக் கேட்க முடியும்; பதாகைகளைக் காண நேரிடும். ஆனால், விமான நிலையத்தில் இருந்து இந்த அரங்கத்திற்கு வரும்வரை அப்படி எதையும் இங்குநான் எதிர்கொள்ளவில்லை. இது பெரியார் மண்ணல்லவா?" என்று அகம் மகிழ்ந்தார் காலித். காஷ்மீரிகளுக்கு இருக்கும் சுயநிர்ணய உரிமைப் பற்றி அழுத்தம் திருத்தமாக உரையாற்றினார்.

கௌரி லங்கேஷ் தன் உயிருக்கு இருக்கும் அச்சுறுத்தல் பற்றி அறிந்திருந்தைப் போல் உமர்

காலித்தும் அதை தெரிந்தே வைத்திருந்தார். உண்மையில் தன் உயிரைவிட தன் பிள்ளையாய் நேசித்த கன்னையா குமார், உமர் காலித் பாதுகாப்புக்குத்தான் கௌரி அதிகமாகக் கவலைப்பட்டார். பலரும் வலியுறுத்திய பிறகே தன் வீட்டு வாயிலில் சி.சி.டி.வி கேமரவைப் பொருத்தினார் அவர். அந்த கேமராவில் அவர் இரத்த வெள்ளத்திலே மூழ்கடிப்பட்டது பதிவானது. கௌரி படுகொலை உமர் காலித் தேர்வு செய்த பாதையை மாற்றிவிட வில்லை. உண்மைக்காகவும், நீதிக்காகவுமான அவர் பயணம் தொடந்தது. எனவே, அவர் ஆர்.எஸ். எஸ்.ஸின் தோட்டாக்களை எதிர்ப்பார்த் திருந்தார். அது நடந்தேவிட்டது. ஆனால், இன்னும் உமர் காலித் சாகவில்லை.

1948 சனவரி 20 அன்று வெடிகுண்டை வெடிக்கச் செய்து ஆர்.எஸ்.எஸ். காந்தியைக் கொல்ல முயன்றது தோல்வியில் முடிந்தது. ஆனால், எந்த பின்வாங்கலும் இன்றி அடுத்த பத்தே நாட்களில் சனவரி 30 அன்று காந்தியின் கதையை முடித்தது ஆர்.எஸ்.எஸ். விஷ்ணு கார்கரே, மதன்லால் பாவா ஆகிய இருவரும் இவ்விரண்டிலும் பங்கேற்றவர்கள். ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் கொலைப்பணியில் இருந்து பின்வாங்குவதில்லை! கௌரி கொல்லப்பட்டு ஓராண்டு இன்னும் முடியவில்லை. கௌரியின் முதலாம் ஆண்டு நினைவுநாள் வரை கூட உமர் காலித் உயிருடன் விட்டு வைக்கப் படுவாரோ என்ற பதற்றம் தொற்றிக் கொள்கிறது. ஏனெனில், ஆர்.எஸ்.எஸ்.ஸின் கொலைத் திட்டங்கள் நேரந் தவறாமல் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன.

பன்சாரே, தபோல்கர் ஆகியோரது கொலைப் பின்னணியில் இருப்பது சனாதன சன்ஸ்தி என்ற சங் பரிவார் அமைப்பு என்பது புலனாய்வில் தெரியவந்தது. "இவ்வமைப்பை தடை செய்வது அவ்வளவு எளிதல்ல, மாவட்டத் திற்கொரு பெயரில் பதிவு செய்துள்ளனர்" என்கிறது மராட்டிய பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு (ATS). சனாதன சன்ஸ்தியைத் தடை செய்யக் கோரி மத்திய உள்துறைக்கு அனுப்பிய கோப்பு உறங்கிக் கொண்டிருக்கிறது. இவ் வமைப்பு உறங்காமல் இயங்கிக் கொண்டிருக் கிறது. மும்பையில் வைபவ் ரௌத் என்ற இவ் வமைப்பைச் சேர்ந்தவரின் வீட்டில் வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை ஆகஸ்ட் 15 சுதந்திர நாளை முன்னிட்டு குண்டு வைப்பதற்காக திட்டமிடப்பட்டது என்று புலனாய்வில் தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில், தலைமை அமைச்சர் மோடி, "எதிர்கட்சிகளைக் கூட்டுச் சேரவிடாமல் சிதறடித்து தேர்தலில் மாபெரும் வெற்றிபெறும் பா.ச.க." என்று நம்பிக்கையோடு முழங்குகிறார். நேற்று நாட்டின் தலைநகரத்தின் மையத்தில் சுதந்திர தின பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லா வற்றையும் மீறி குண்டு சத்தம் கேட்டுள்ளது. எதுவும் எந்நேரமும் நடக்கலாம் என்ற வகையில் பீதியூட்டும் சர்வாதிகார ஆட்சியைக் காவி-கார்ப்பரேட் கூட்டணி நடத்திவருகிறது.

பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் இத்தாலியில் தலையெடுத்தது பாசிசம். முசோலினி பாசிஸ்ட் கட்சியைத் தொடங்கினான். சீருடை அணிந்த அக்கட்சியின் உறுப்பினர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வரும்வரை கம்புகளால்தான் தம் எதிரிகளான கம்யூனிஸ்ட்களைத் தாக்கினர். ஆனால், ஆட்சிக்கு வந்தப் பிறகு கம்யூனிஸ்ட்களுக்கு எதிராகத் துப்பாக்கியைப் பயன்படுத்தினர்.

உத்தர பிரதேசத்தின் பீம் ஆர்மி அமைப் பின் தலைவர் சந்திரசேகர் ஆசாத், குஜராத்தைச் சேர்ந்த ஜிக்னேஷ் மேவானி, உமர் காலித்தைப் போன்ற ஜே.என்.யூ. பல்கலைக் கழக மாணவர்கள் தம் உயிருக்கு விடப்படும் சவாலை ஏற்றப்படி பாசிச கூறுகள் கொண்ட ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்த்து நிற்கின்றனர். ஆனாலும், உமர் காலித்துகளை தீர்த்துக் கட்டியே ஆக வேண்டுமென ஆர்.எஸ்.எஸ். குறி வைப்பதற்கான காரணங்களைக் கண்டாக வேண்டும்.

உமர் காலித் 'பகத்சிங் அம்பேத்கர் மாணவர் இயக்கத்தைச்'(BASO) சேர்ந்தவர். சுரண்டல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதன் இந்தியக் குறியீடான பகத் சிங்கின் மரபையும் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதன் குறியீடான அம்பேத்கரின் மரபையும் ஒருசேர உயர்த்திப் பிடிப்பது காவிக் கும்பலுக்கு கிலியூட்டுகிறது. "நானும் இந்துதான். நான் ஒரு சிவ பக்தன்" என்று தாராளவாதிகள் போல்

இவர்கள் பம்முவதில்லை. "பொருள்முதல்வாதி களாகிய நாங்கள் அஞ்சுவதில்லை" என்று மாவோ சொன்னதைப்போல் பகுத்தறிவாளர் களாகவே இவர்கள் வலம்வருவது ஆர்.எஸ்.எஸ். ஸின் தூக்கம் கெடுக்கிறது. மோடியின் ஆட்சி காவி ஆட்சி என்பதோடு இவர்கள் நிறுத்திக் கொள்வதில்லை. காவி-கார்ப்பரேட் சர்வாதிகார ஆட்சி என்று துல்லியப்படுத்துகின்றனர். பார்ப்பனிய இந்துத்துவ பாசிஸ்ட்கள் என்று இந்த ஆட்சியை நிர்வாணப்படுத்துவதால் ஆர்.எஸ்.எஸ். பதற்றம் கொள்கிறது. "மாநில உரிமைகள்-தேச ஒற்றுமை" என்று இவர்கள் முனைமழுங்கிய அம்பெய்வதில்லை. "இந்தியா தேசமல்ல ஓர் ஒன்றியம், தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு" என்று கூர்தீட்டிய ஈட்டியாய் பாய்வதால் ஆர்.எஸ்.எஸ். அலறுகிறது. மத்தியப் புலனாய்வு துறையைக் கொண்டு கையாள்வதற் கேற்ற ஊழல் குற்றச் சாட்டுகள் இவர்கள் மேல் இல்லை. வேறு வழியின்றி ஆர்.எஸ்.எஸ். துப்பாக் கியைத் தெரிவு செய்கிறது.

**தன் உயிரைவிட தன் பிள்ளையாய் நேசித்த கன்னையா குமார், உமர் காலித் பாதுகாப்புக்குத்தான் கௌரி அதிகமாகக் கவலைப் பட்டார்.**

ஐதராபாத் பல்கலைக் கழகத்தில் நிலவும் சாதியடிப்படையிலான பாகுபாடுகளை எதிர்த்துப் போராடியவர்; 2016 சனவரி 17 அன்று இதை அம்பலப்படுத்திய வண்ணம் தன் உயிரை மாய்த்துக் கொண்டு நட்சத்திரங்களில் சங்கமித்துப் போன ரோஹித் வெமுலாவின் தாய் ராதிகா வெமூலா அங்கு உரையாற்ற இருந்தார்.

2016 அக்டோபர் 15இலிருந்து காணாமல் அடிக்கப்பட்ட ஜே.என்.யூ. பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நஜீப் அகமதுவின் தாய் பாத்திமா நஜீம் அங்கு பேச இருந்தார்.

2017 செப்டம்பரில் கோரக்பூர் மருத்துவ மனையில் ஆக்ஸிஜன் சிலிண்டர் இல்லாத நிலையில் மருத்துவமனையில் உள்ள குழந்தை களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக முயன்றதைத் தவிர வேறெந்த குற்றமும் செய்யாதவர்; அதனாலேயே முதல்வர் யோகி ஆதித்ய நாத்தின் நிர்வாகப் பிரச்சனை களுக்கானப் பலிகடாவாக்கப்பட்டு எட்டு மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டவர்; சிறையில் இருந்து பிணையில் வந்த பிறகு அச்சம் தவிர்த்து யோகி ஆதித்திய நாத் அரசுக்கு எதிராகப் பேசியதால் இவரது குடும்பத்தின் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டது. தன்னுடைய அண்ணனுடன் இருக்கும் போது அடையாளம் தெரியாத இருவர் இவரது அண்ணனைத் துப்பாக்கியால் சுட்டனர். இத்தனை இன்னல்களுக்கும் ஆளானவர் மருத்துவர் கஃபீல் கான். அவரும் அச்சத்தில் இருந்து விடுதலை ஆவதை நோக்கிப் பேச வந்திருந்தார்.

ஈகைப் பெருநாளுக் காகப் பொருட்களை வாங்கிக் கொண்டு தன் சொந்த ஊரான அரியானா மாநிலத் தில் உள்ள பரிதாபாத்திற்கு தன் இரண்டு சகோதர் களுடன் ரயிலில் போய்க் கொண்டிருந்த 17 வயது இளைஞன் ஜூனைத் மாட் டிறைச்சி வைத்திருந்தான் என்ற ஐயத்தின் பெயரால் பட்டப்பகலில் வெட்ட வெளிச்சத்தில் ஊரே கூடிநின்று வேடிக்கைப் பார்க்க, காவி குண்டர்களால் 2017 ஜூன் 23 அன்று அடித்தே கொல்லப்பட்டார். அவரது தாய் பாத்திமா அங்கு வந்திருந்தார்.

2018 ஜூன் 18 அன்று உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள ஹப்பூர் மாவட்டத்தில் பசுப் பாதுகாப்புக் குண்டர்கள் குவாசிம்மையும் சமயதினையும் தாக்கினர். குவாசிம் கொல்லப் பட்டார். சமயதின் சாகவில்லை. அந்த சமயதின் அச்சத்தில் இருந்து விடுதலையாவதை நோக்கிய கூட்டத்தில் பேச வந்திருந்தார்.

2017 ஜூன் 29 இல் சத்தீஸ்கர் மாநிலத்தில் அசாரிபாக் மாவட்டத்தைச் சேர்த்த முகமது அலிமுதீன் பசு பாதுகாப்புக் குண்டர்களால் மாட்டிறைச்சி வைத்திருந்தார் என்ற பெயரில் கிரிடி மாவட்டத்தில் அடித்தே கொல்லப் பட்டார். அவரது மனைவி மரியம் அக்கூட்டத்தில் பேச வந்திருந்தார்.

இந்தப் பட்டியலில் இவர்தான் மிகவும் தனித்துவமானவர் யஷ்பால் சக்சேனா. இவரது மகன் அன்கிட் சக்சேனா ஓர் இஸ்லாமியப் பெண்ணைக் காதலித்தக் காரணத்தால் அப் பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரால் இவர் கண்முன்னே கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்டார். பஜ்ரங் தளம் இதைப் பயன்படுத்தி இந்து-முஸ்லிம் கலவரத்தைத் தூண்ட விரும்பியது. ஆனால், தனக்கு இஸ்லாமிய சமூகம் மீது எவ்வித வெறுப்பும் இல்லை என்றார் யஷ்பால் சக்சேனா. அவர் வெறுப்புக்கு எதிராக ஒன்றுபட்டோரின் மேடையில் பேச வந்திருந்தார்.

ரோஹித் வெமுலா மறையவில்லை. அவர் அவரது தாய் ராதிகா வெமுலாவின் உருவில் அடக்குமுறையாளர்களை எதிர்த்துக் கொண் டிருக்கிறார். நஜீம் காணாமலடிப்பட்டாலும் அவர் தாயின் வடிவில் வருகிறான். அடக்கு முறையால் உறவை இழந்த அன்னையர்களும் தந்தையர்களும் சகோதரர்களும் நண்பர்களும் மனைவியரும் அஞ்சி ஓடிவிடுவதில்லை. அவர்கள் நீதியின் பதாகையை ஏந்தியப்படி வருகின்றனர். ஆதிக்கத்திற்கு எதிராக அவர்கள் ஒன்றுபட்டு வருகின்றனர். ஒடுக்கப்பட்டிருப் போரின் ஒற்றுமைதான் ஒடுக்குமுறையாளர் களை நடுநடுங்கச் செய்கிறது.

உமர் காலித், கௌரி லங்கேஷ் போன்றோர் தலித்துகள், பழங்குடிகள், மதச் சிறுபான்மையினர், சனநாயகப் பற்றாளர்கள், உழைக்கும் வர்க்கத்தினர், தேசிய இனங்கள் ஆகிய ஒடுக்கப்பட்டோரின் ஒற்றுமை குறித்துக் கொண்டிருக்கும் கண்ணோட்டம்தான் காவி-கார்ப்பரேட் கூட்டணியை நடுங்கச் செய்கிறது.

இந்த தத்துவார்த்த போரில் ஆர்.எஸ்.எஸ். வெறுப்பை கக்கியபடி அச்சத்தை மறைத்துக் கொண்டு துப்பாக்கியை ஏந்தி திரிகிறது. எப்படியும் வெற்றிக் கொண்டுவிடலாம் என்று அது நம்புகிறது. இன்னொருபுறம் வெறுப்புக்கு எதிராக ஒன்றுபட்டோராக அச்சத்தில் இருந்து விடுதலை அடைவதை நோக்கி உமர் காலித்தும் ஜிக்னேஷும் சந்திரசேகர் ஆசாத்தும் ராதிகா வெமுலாவும் பாத்திமா நஜீமும் இணைந்து நிற் கின்றனர். யஷ்பால் சக்சேனாவிடம் தோற்றுப் போனதைப்போல் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் இக்கோடிக்கணக்கான மக்களால் வெறுத்து ஒதுக்கப்படும்வரை இந்தப் போர் தொடரும்.

**கட்டுரையாளர் : 'இளந்தமிழகம்' ஒருங்கிணைப்பாளர்**

## பஞ்சாப் மாநிலத்தின் விபரீத சட்டம்

*புனித நூல்களாகக் கருதும் சீக்கியர்களின் குரு கிரந்த் சாகிப், இஸ்லாமியர்களின் குரான், இந்து பார்ப்பனர்களின் 'பகவத்கீதை' ஆகியவற்றை சேதப்படுத்துவோர், களங்கப்படுத்துவோருக்கு ஆயுள் தண்டனை என்று பஞ்சாப் மாநில அரசு சட்டம் நிறைவேற்றியிருக்கிறது. 1860ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி கொண்டு வந்த தண்டனைச் சட்டப்படி உள்நோக்கத்தோடு மத உணர்வுகளைப் புண்படுத்துவோருக்கு 3 ஆண்டுகள் வரை தண்டனை வழங்கும் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. இப்போது ஆயுள் தண்டனையாக மாற்றி திருத்தம் செய்திருக்கிறது பஞ்சாப் மாநில அரசு.*

*'மத உணர்வுகளைப் புண்படுத்துதல்' என்ற சட்டம் ஏற்கனவே முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மத நூல்களை பகுத்தறிவு அடிப்படையில் கேள்விக்குட்படுத்தினாலே மத உணர்வைப் புண்படுத்துவதாக மதவாதிகள் கூச்சல் போட்டு பகுத்தறிவு சிந்தனைகளை முடக்கத் துடிக்கிறார்கள். இந்த நிலையில் இப்படி ஆயுள் தண்டனை வழங்கும் சட்டத் திருத்தம் மிகவும் கண்டிக்கத்தக்கது.*

*"நான்கு வர்ணத்தை நான் தான் படைத்தேன் என்று பகவான் கிருஷ்ணன் கூறும் பகவத் கீதையை நியாயமாக தடை செய்திருக்க வேண்டும். அதை முட்டாள்களின் உளறல்" என்றார், புரட்சியாளர் அம்பேத்கர். இப்போது அம்பேத்கர் இருந்திருந்தால் பஞ்சாப் சட்டப்படி ஆயுள் தண்டனைக்கு உள்ளாகியிருப்பார்.*

*இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதே மதத்தையும், கடவுளையும் அவமதிப்பதாகும். இந்தப் புனித நூல்களை எதிர்ப்போரை கடவுள் தண்டிக்க மாட்டாரா? சட்டம் போட்டுத்தான் தண்டிக்க வேண்டும் என்றால், அதுவே 'கடவுள் மத நிந்தனை' அல்லவா?*



# பெண்களின் 'தீட்டும்' அய்யப்பன் 'புனிதமும்'

● செ.கார்கி

*அய்யப்பன் கோயிலுக்குள் பெண்களையும் அனுமதிக்கலாம் என்று கேரள அரசு எடுத்த முடிவுதான் அய்யப்பன் கோபத்துக்கு உள்ளாகி, அதன் காரணமாக கேரளம் வெள்ளத்தால் தவிக்கிறது என்று ஆடிட்டர் குருமூர்த்தி உள்ளிட்ட பார்ப்பனர்கள் கூறுகிறார்கள். அய்யப்பன் கோயிலுக்குள் பெண்களுக்கு எதிரான தீண்டாமைக்கு எதிராகப் போராடும் பெண்கள், அய்யப்பன் பக்திமயக்கத்திலிருந்தும் வெளியேற வேண்டாமா?*

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்று இளம் வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு தொடுத்த வழக்கில் உச்சநீதி மன்றம் "ஐயப்பன் கோயிலில் பெண்களுக்கு அனுமதி மறுப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்றும் அனைவருக்கும் கோயிலில் வழிபட உரிமை உள்ளது" என்றும் கருத்து தெரிவித்துள்ளது. ஆனால் கோயில் நிர்வாகம் "மாதவிடாய் காலத்தில் உள்ள 10 வயது முதல் 50 வயது வரையுள்ள பெண்களை கோயிலுக்குள் அனுமதித்தால் புனிதம் பாதிக்கப்படும் எனவே அவர்களை அனுமதிக்க முடியாது" என்று மறுத்துள்ளது.

அதே போல நாயர் சர்வீஸ் சொசைட்டி சார்பில் மூத்த வழக்கறிஞர் பராசரன் "நன்கு படித்தவர்கள் நிறைந்த மாநிலம் கேரளம். இங்கு 96 சதவீத பெண்கள் படித்தவர்கள். சுதந்திரமாக செயல்படக் கூடியவர்கள். சபரிமலைக்கு பெண்கள் அனுமதிக்கப்படாததை 'சதி'யோடு தொடர்புபடுத்தக்கூடாது. இந்து நம்பிக்கைக்கும் சதிக்கும் தொடர்பு கிடையாது. ஆணாதிக்கம் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதும் தவறு. சபரிமலை ஐயப்பன் நைஷ்டிக பிரம்மச்சாரி. அவர் தனித்துவம் வாய்ந்தவர். கடவுளே கோயிலுக்குள் இந்த வயதுடைய பெண்கள் வருவதை விரும்பவில்லை. பிறகு நாம் எப்படி அனுமதிக்க முடியும்? இந்து மதத்தில் சகிப்புத் தன்மை அதிகம். இங்கு பாலினப் பாகுபாடும் கிடையாது. இது கோயிலின் புனிதத்தன்மையை காப்பதற்காக தொன்றுதொட்டு வரும் நிகழ்வாகும். சபரிமலைக்கு ஆண்கள் தங்களது தாய், மகள், சகோதரி என எவரையும் அழைத்துவரும் உரிமை உள்ளது. ஆனால் வயதுதான் 50-க்கு அதிகமாகவும், பத்துக்கு குறைவாகவும் இருக்க வேண்டும். விரத காலங்களில் பிரம்மச்சர்யம் மேற்கொள்ள

வேண்டும்" என்று இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகள் 26(பி), 25(2), 17 முன்வைத்து வாதாடியுள்ளார்.

"சபரிமலைக்கு பெண்களை அனுமதிக்கக் கூடாது என ஒலிப்பது பாரம்பரியத்தின் குரல்கள். அரசியலமைப்பு சட்டம் 14-க்கு இணையாக ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்த அர்த்தநாரீஸ்வரராக சிவன் காட்சியளிக்கும் மதம் இந்து மதம். சிவன் பிரம்மச்சாரி அல்ல. அவர் யோகத்தில் இருந்தபோது நித்திரையை கலைத்த மன்மதனை எரித்தார். இதேபோல் இங்கு ஒவ்வொன்றும் ஆன்மிக ரீதியிலானவை என்றும் தனது வாதங்களை முன்வைத்துள்ளார்.(நன்றி: 'இந்து' தமிழ்)

உரிமைக்குப் போராடுவது நியாயம்தான். ஆனாலும் ஆணுக்கும் ஆணுக்கும் ஓரினச் சேர்க்கை மூலம் பிறந்த இந்துக் கடவுளான அய்யப்பனை பெண்கள் ஏன் கும்பிட விரும்புகின்றார்கள் என்பது நமக்கு வியப்பாக உள்ளது. இந்த ஆபாசத்தை நாம் சுட்டிக் காட்டினால் எங்கள் நம்பிக்கையில் தலையிடாதீர்கள் என்பார்கள்.

பொதுவாக இந்துமதம் என்றில்லாமல் எல்லா மதங்களுமே பெண்களின் உரிமைகளை நிராகரிக்கின்றன. இதற்கு காரணம் அனைத்து மதங்களும் தாய் வழி சமூக அமைப்பு தகர்ந்து தந்தைவழி சமூக அமைப்பு உருவான காலத்தில் ஏற்பட்டதாகும். மதங்கள் அனைத்தும் ஆணின் பார்வை வழியே சொல்லப்பட்டதால் அந்தச் சமூக அமைப்பில் பெண்களின் இடம் எவ்வாறு இருந்ததோ அதையே தான் அவர்கள் பிரதி பலித்தார்கள்.

இன்று தீட்டாகவும், அருவருப்பான தாகும் கருதப்படும் மாதவிலக்கு என்பது எல்லா காலங்களிலும் அவ்வாறு பார்க்கப்படவில்லை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த ஆணாதிக்க தந்தை வழி சமூக அமைப்பு ஏற்படுவதற்கு முன்பு மாதவிலக்கு என்பது புனிதமானதாகவே கருதப்பட்டு வந்தது. மாதவிலக்கு இரத்தம் என்பது வளமையின் குறியீடாக பார்க்கப்பட்டது. தாந்திரீகத்தில் மாதவிலக்கு ரத்தத்திற்கு காபுஷ்பம் என்று பெயர். இந்தச் சொல்லானது தாவரங்களுடனான உறவைக் காட்டுவதாகும். பெண் குழந்தையைப் பெறுவதுபோல, இச்செடியும் பூத்துக் காய்க்கிறது. பெண் பிறப்புறுப்பு செடி அல்லது லதா என்று அழைக்கப்பட்டது. கருவுறுதலுக்கு முன்னர் மாதவிலக்கு நிகழ்வது போலக் காய்ப்பதற்கு முன்னர் பூ பூக்கிறது என்று நம்பப்பட்டது இதனால் மாதவிலக்கு இரத்தம் புஷ்பம் என்றும் அழைக்கப்பட்டது.

"மாதவிலக்கு இரத்தம் மனித விருத்திக்கு அடிப்படையாகவும், வளமையின் குறியீடாக வும் தொல்பழங்கால தாய்வழிச் சமூகத்தால் கருதப்பட்டது. விதைப்பதற்கு முன்பு தங்கள் வயல் வெளியில் ஒரு கல்லை நட்டு அதற்கு குங்குமம் பூசுகின்றார்கள். இந்த குங்குமம் என்பது மாதவிலக்கு இரத்தத்தின் குறியீடு ஆகும். இதன் மூலம் வயல்களில் உற்பத்தியை பெருக்க முடியும் என அவர்கள் நம்பினர். பண்டையக் காலத்திலும், மத்திய காலத்திலும் வாழ்ந்த இயற்கைவளம் சார்ந்த சிந்தனை யாளர்களான அரிஸ்டாட்டில், பிளினி போன்றோர் மாதவிலக்கு நின்ற பின்னர் கருப்பையில் தேங்கியிருக்கும் இரத்தத்திலிருந்து கரு உருவாகிறது என்று கருதினார்கள்.

தாம்சன், "மனித இனவிருத்தி சார்ந்த மந்திரத்தில் அதன் முடிவு (குழந்தை) பற்றிக் கவனிப்பதில்லை. அதில் இடம்பெறும் செயல் முறைக்குத்தான் (பிரசவக் கழிவுகள், மாதவிலக்கு இரத்தம்) அதிக முக்கியத்துவம் அளிக்கப்படு கின்றது. எனவே மாதவிலக்கு இரத்தம், பிரசவக் காலக் கழிவுகள் ஆகியன பெண்ணிடம் உள்ள உயிர்ச் சத்தியின் வெளித்தோற்றங்கள் என்று கருதப்படுகின்றன. தொல்பழங்காலக் கருத்துப் படி மாதவிலக்கு என்பது குழந்தைப்பேற்றிற்கு ஒப்பதான செயலாகும்" என்கின்றார்.

"இந்தியாவின் பிற்கால மதங்களில் இந்தப் தொல்பழங்கால நம்பிக்கைகள் இடம் பெற் றிருந்தன. வானம் இடித்து முதல் மழைத்துளி விழும்போது பூமித்தாய் மாதவிலக்காகித்தான் கருவுறுவதற்கு வேண்டிய செழிப்பை உரு வாக்கிக் கொள்கின்றாள் என்று வங்காளத்தில் நம்பப்படுகிறது. அப்போது உழவு, விதைப்பது, பிற விவசாய வேலைகள் எல்லாவற்றையும் நிறுத்தி வைக்கப்படுகின்றன. அந்த நாளில்

**ஆணாதிக்க தந்தை வழி சமூக அமைப்பு ஏற்படுவதற்கு முன்பு மாதவிலக்கு என்பது புனிதமான தாகவே கருதப்பட்டு வந்தது.**

கொண்டாடப்படும் சடங்கு 'அம்வுவசி' எனப்படுகிறது."

"இதே போலத் திருவனந்தபுரத்தில் கோயிலில் அவ்வப்போது ஒரு முக்கிய சடங்கு இடம் பெறுகின்றது. இதற்கு 'திரிப்புக்கரட்டு' சடங்கு அல்லது சுத்தி செய்தல் என்று பொருள். இது அம்மன் மாதவிலக்காகிறாள் என்பதைக் குறிக்கிறது. இது ஆண்டொன்றிற்கு எட்டு அல்லது பத்துத் தடவை நிகழ்கிறது. அம்மன் உலோகச் சிலையைச் சுற்றி அணியும் துணியில் மாத விலக்கின் போது உண்டாகும் இரத்தக் கறைகள் காணப்படுகின்றன. அவ்வாறு நம்பப் படுகின்றது) இத் துணியை வஞ்சிப் புழா அல்லது தளவூர் பட்டியில் உள்ள பெண்களுக்கு அனுப்பிச் சோதிக்கிறார்கள். இக்காலத்தில் கர்ப்பக்கிரகம் மூடப்பட்டு சிலை தனிக் கொட்டகையில் வைக்கப்படுகிறது. இத் துணியை பெண் சலவைத் தொழிலாளி வெளுத்தபின் அவளே எடுத்துக் கொள்கிறாள். அது மறுபடியும் பயன்படுத்தப்படுவதில்லை. சாயம் போன இத்துணிக்கு மிகுந்த தேவை உண்டு. இது ஒரு புனிதச் சின்னமாக விளங்கு வதால் பெண்கள் விரும்பி வாங்குகின்றனர்."

"அதேபோல சங்கனூரில் பார்வதியின் மாதவிலக்கிற்கு மிகப்பெரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அஸ்ஸாமில் காமக்கியா வும் இது போன்றதாகும்.உற்பத்தி, இன விருத்தியை ஒன்றாக்கும் மந்திர நம்பிக்கைகள் தாந்திரீகத்துடன் தொடர்புடையவை என்றால், மாதவிலக்கு இரத்தத்திற்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுவதும் இயல்பானதே" என்கிறார் ஆய்வாளர் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. எப்போது இந்திய சமூகத்தில் பார்ப்பனியம் ஒரு மதமாக கோலோச்சியதோ அப்போதில் இருந்துதான் பெண்கள் பற்றிய மதிப்பீடுகள் வீழ்ச்சியடைந்தன. இந்துமத புராணங்கள் இந்திரனுடைய பிரம்மஹத்தி தோஷத்தில் மூன்றிலொரு பாகத்தை பெண்கள் ஏற்றுக் கொண்டதால் அவர்கள் பூப்படைந்ததாக கூறு கின்றது. இதனால் மாதவிடாய் ஆன பெண்கள் பிரம்மஹத்தி வடிவை அணிந்து கொண்டிருப் பவள் என்று சொல்லப்பட்டது. மேலும் பெண்கள் எந்தச் சாதியில் பிறந்திருந்தாலும் அவர்கள் பிரம்மஹத்தி தோஷத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டதால் தாழ்ந்த குலமாகவே கருதப்பட்டனர். இதனால் சொர்க்கம் செல்லும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. எட்டு வயதுக்குள் பெண் களுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட வேண்டும். அப்படி பூப்படையும் காலம்வரை செய்யாதிருப்பது பெரும் குற்றத்திற்குரிய தண்டனையாகக் கருதப்பட்டது. பூப்படை வதற்கு முன் பெண்ணை திருமணம் செய்து கொடுக்காத தந்தை அப்பெண்ணின் ஒவ்வொரு மாதவிடாய் காலத்திலும் மாதவிடாயை பருக வேண்டும் அல்லது "பிராமணனுக்கு" கொழுத்த பசுவை தானமாகக் கொடுத்துவிடவேண்டும்.

பெண்களின் மீது எவ்வளவு வன்மம் நிறைந்த பார்வை பார்ப்பனியத்துக்கு இருந்திருந் தால் இப்படியொரு தண்டனையை வழங்கி யிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். பெண் களுக்கு இந்துமதம் சம உரிமையை கொடுத்திருக் கின்றது என்று பேசிக்கொண்டே அவர்களின் அத்தனை உரிமைகளையும் புராணபுரட்டுகளின் மூலம் பறித்தது பார்ப்பன இந்துமதம். புராணங்களை எழுதியவன் எல்லாம் யார் என்று தெரியாது, அதனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது, உள்ளபடியே இந்துமதம் பெண்களை உயர்ந்த இடத்தில் வைத்தே பார்க்கின்றது என்று சண்டைக்கு வருபவர்களுக்கு சந்திரசேகரேந்திர சரஸ்வதி எழுதிய தெய்வத்தின் குரல் என்ற நூலை படித்து உண்மையை தெரிந்து கொள்ளலாம். அதில்

"ஆலயங்களுக்கு உள்ளேயே நடக்கிற அநாசாரங்களை என்னைத் தவிர யாரும் எடுத்துச் சொல்லமாட்டார்கள் போலிருக்கிறது. அதையும் நானே சொல்கிறேன். இப்போதெல் லாம் டூரிஸ்டுகள், 45, 50 நாள் யாத்திரை கோஷ்டிகள், காலேஜ் பெண்கள், ட்ரெயினிங் ஸ்கூல் பெண்கள் என்று பலர் கூட்டம் கூட்டமாகக் கோயில்களுக்கு பஸ்கள் அமர்த்திக் கொண்டு வருகிறார்கள். அவர்களில் எத்தனையோ பேர் விலகியிருக்க வேண்டிய

காலத்திலும் தரிசனத்திற்கு வந்து விடுகிறார்கள். இப்படி செய்வது தோஷம் என்று தெரியாத தாலேயே பெரும்பாலும் கோயிலுக்கு வந்து விடுகிறார்கள். முன்பெல்லாம் வீட்டு விலக்கு என்று அவர்களை வீடுகளிலேயே தனித்து வைத் தார்களோ அவர்கள் இப்போது கோயிலிலும் கூட விலக்கு இல்லாமல் பிரவேசித்து விடு கிறார்கள். 'ஸ்வாமிக்கு ஏது தீட்டு?' சீர்திருத்தக்காரர்கள் நான் சொல்வதை ஆட்ஷேபிக்கலாம். தீட்டு இல்லாத சுவாமி எங்கேயும் இருக்கிறார். அவரைக் கோயிலில் தான் வந்து தரிசிக்க வேண்டுமென்பதில்லையே? சாஸ்திரப் பிரகாரம் ஸ்வாமியின் சாந்நித்தி யத்தைக் கிரகித்துத் தரும் கோயில்களில், அந்த சாஸ்திரங்கள் சொன்ன விதிப்படிதான் ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டும். இந்த விதிகளை மீறுவதால்தான் பல மகாஷேத்திரங்களில், விபத்து, விபரீதம் எல்லாம் ஏற்படுகின்றன என்பது என் அபிப்பிராயம்'' என்றும்,


"இப்போது அந்த மூன்று நாட்களும் ஸ்திரீகள் ஆஃபீஸுக்குப் போவதில் ஊர் பூராவும் தீட்டுப் பரவுகிறது. 'அட்மாஸ்ஃபைரிக் பொல்யூஷன்' (atmospheric pollution) என்று இன்றைக்கு அநேக விஷயங்களை எடுத்துக் காட்டி எதிர் நடவடிக்கை எடுக்கும்படி எச்சரிக் கிறார்கள். அந்தப் 'பொல்யூஷன்' எல்லாவற்றை யும்விடப் பொல்லாதது ஸ்திரீகளின் தீட்டே. அது செய்கிற கெடுதல் வெளியிலே தெரியாததால் அதைக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். கவனிக் கிறவர்களையும் ஆசாரப் பைத்தியங்கள் என்று ஒதுக்குகிறார்கள். வாஸ்த்தவத்திலோ இந்தத் தீட்டு அமங்கள சக்திகளையெல்லாம் இழுத்துக் கொண்டு வரும். அதை இப்படி எல்லா இடத்திலும் கலக்க விட்டால் ஜனங்களுக்கு எத்தனை தான் வரும் படி வந்தாலும், கவர்ன்மென்ட் எத்தனைதான் five year plan போட்டாலும் தேசத்தில் துர்பிக்ஷமும், அசந்தியும், வியாதியு மாகத்தான் இருக்கும்'' என்றும் கூறுகின்றார்.

உலகத்தில் இருக்கும் எல்லா பிரச்சினை களுக்கும் பெண்ணின் மாதவிலக்குத்தான் காரணம் என்று பார்ப்பன தெய்வத்தின் குரலாய் நின்று சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஒலிக் கின்றார்.

**திருவனந்தபுரத்தில் கோயிலில் அவ்வப்போது ஒரு முக்கிய சடங்கு இடம் பெறுகின்றது. இதற்கு திரிப்புக்கரட்டு சடங்கு அல்லது சுத்தி செய்தல் என்று பொருள். இது அம்மன் மாத விலக்காகிறாள் என்பதைக் குறிக்கிறது.**

இதனால்தான் ஐயப்பன் கோயிலில் மட்டுமல்ல மாதவிலக்கான காலத்தில் எந்தப் பார்ப்பன கடவுள்கள் இருக்கும் கோயிலிலும் பெண்கள் உள்ளே வர சாஸ்திரங்கள் அனுமதிப் பதில்லை. இதை எல்லாம் சாஸ்திரங்கள் எழுதிய காலத்தில் மாதவிலக்கு பற்றிய அவர்களின் அறியாமையால் எழுதப்பட்டது என்று நாம் புறம்தள்ளிவிட முடியாது. இன்று அறிவியல் வளர்ச்சி உச்சத்தில் இருக்கும் காலத்திலும் மாதவிலக்கு தீட்டாக கருதப்பட்டு பெண்களை இழிவுபடுத்தும் செய்கைகள் தொடர்ந்து நடந்து தான் வருகின்றது. இதை எல்லாம் செய்வது படிக்காத பாமரர்கள் கிடையாது. அனைவருமே மெத்த படித்தவர்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலேயே அதிகமான கல்வியறிவு கொண்ட, அதிகமுறை இடதுசாரிகளால் ஆளப்பட்ட கேரளத்திலேயே இந்த நிலைமை என்றால் கல்வியறிவில் பின்தங்கிய மாநிலங்களில் இருப்பவர்களின் சிந்தனை நிலமை எப்படி இருக்கும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று சபரிமலை ஐயப்பன் கோயிலில் வெளிப்படையாக பெண்களுக்கு எதிரான தீண்டாமை கடைபிடிக்கப்படுவதற்கு பெரும் பாலான பெண்கள் பார்ப்பன ஆணாதிக்க கருத்தியலை கேள்வி இன்றி ஏற்றுக் கொண்டதும் ஒரு காரணமாகும். பெண்கள் தங்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களை இழிவு படுத்தும் மதங்களையும் அது பிரதிநிதித்துவப் படுத்தும் சாஸ்திரங்களையும், கடவுள்களையும் எதிர்ப்பதற்கு முன்வரும்போது தான் பெண் ணுரிமை உறுதியாக முடியும். மதங்களுக்குள் நின்றுகொண்டு உரிமை கோருவது பீக்காட்டில் நின்றுகொண்டு நாற்றம் எங்கிருந்து வருகின்றது என்று தெரியாமல் புலம்புவது போன்றதாகும். ●



பெரியாரியலுக்கு வலிமை சேர்க்கும் அண்மைக்கால வரவுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றிருப்பது, பெரியாரிய ஆய்வாளர் வீ.எம்.எஸ். சுபகுணராஜன் தொகுத்து வெளியிட்டுள்ள 'நமக்கு ஏன் இந்த இழிநிலை' நூலாகும். ஜாதி மாநாடுகளிலும் ஜாதி ஒழிப்பு மாநாடுகளிலும் பெரியார் நிகழ்த்திய உரைகளைத் தொகுத்து சுமார் 400 பக்கங்களோடு இந்த நூல் வெளி வந்திருக்கிறது. இந்த நூலுக்கு தொகுப்பாசிரியர் 60 பக்கங்களுக்கு அய்ந்து அத்தியாயங்களைக் கொண்ட ஆழமான முன்னுரை எழுதியிருக்கிறார். இதில் ஜாதி சங்க மாநாடுகளில் பெரியார் எனும் தலைப்பில் எழுதியுள்ள பகுதியை இங்கு வெளியிடுகிறோம். ஜாதி சங்கங்களில் ஜாதியைக் கடுமையாக விமர்சித்துப் பேசக்கூடிய நேர்மையும் துணிவும் கொண்ட தலைவராக பெரியார் இருந்திருக்கிறார் என்பதை இதைப் படிக்கும்போது உணர முடியும். இப்போதும் ஜாதி ஒழிப்புக்கான கருத்தாயுதங்களாக இவை திகழ்கின்றன.

# ஜாதி சங்க மாநாடுகளில் ஜாதியை எதிர்த்த பெரியார் (2)

ஆதி திராவிடர் மகாநாடுகள், நாடார் சங்க மகாநாடுகளுக்குப் பிறகு பெரியார் அதிகமாகப் பங்கேற்றது செங்குந்தர் மகாநாடுகளில்தான். இந்தத் தொகுப்பில் உள்ள உரைகளில் காலத்தால் முந்தியது அவிநாசியில் 27, 28.12.1925 தேதிகளில் நடந்த கோவை மாவட்ட செங்குந்தர் மாநாட்டில் பெரியார் நிகழ்த்திய உரைதான். அந்த உரையில் கடந்த பத்து ஆண்டுகளாக இந்தச் சங்கத்தினர் செய்துவரும் பணியால், செங்குந்தர் குலமானது பெருமை யுடனும், செல்வாக்குடனும் இருந்து வருகிறது எனப் பாராட்டுகிறார். நெசவாள சமூகமான செங்குந்தர்கள் தொழில் அபிவிருத்தி கருதியும் சங்க நடவடிக்கைகளை கவனமாக நடத்தி வந்தது தெரிகிறது. பெரியார் பின்னர் கலந்து கொண்ட மகாநாடு ஒன்று தொழில் தொடர்பான கண்காட்சியாகவே நடந்த தகவல் காணக் கிடைக்கிறது. இந்த சமூகம் அடைந்திருக்கும் முன்னேற்றம் சில குலாபிமானி களின் நேர்மையான, அர்ப்பணிப்பான உழைப்பால் எனப் பாராட்டி விட்டு, தொடர்ந்து இதுமட்டும் போதாது என்று இரண்டு மிக முக்கியமான விடயங்கள் குறித்துப் பேசுகிறார். முதலாவது பிரச்சினை இந்தக் குலத்தவரில் ஒரு பகுதியினர் பெண்களை கோவிலின் பேரால் பொட்டுக்கட்டி வேசித் தொழில் செய்ய அனுமதிப்பதை கடுமையாக விமர்சிக்கிறார். ஒரு சமூகம் தனது அவலமான பகுதியாக எண்ணி ஒளித்துக் கொள்ள விரும்பும் ஒன்றை சாதி மாநாட்டின் பொது அரங்கில் பேசி விமர்சிக்கிறார்.

இரண்டாவதாக அவர் முன் வைக்கும் விடயமும் மிக முக்கியமானது. குறிப்பாக செங்குந்தர் சமூகம் போன்ற ஒரு தரப்பினர் வளமானவர்களாகவும் மற்றொரு தரப்பினர்

கடுமையான உழைப்பிற்குப் பின்னும் வறுமை யில் வாடுபவர்களாக இருக்கும் சூழலில் அதன் மற்றொரு பிரிவினரின் 'இழிநிலை' பற்றிய பேச்சு எவ்வளவு வரவேற்பு பெற்றிருக்குமென தெரியவில்லை. நெசவாள சமூகத்தின் மற்றொரு பிரிவினர் பெண்களுக்கு 'பொட்டுக்கட்டும்' வழக்கம் கொண்டவராயும், ஆண்கள் நாதஸ்வரம் வாசிப்பவர்களாகவும் இருந்தனர் என்ற தகவலே இன்றும்கூட பெரிய அளவில் அறியப்படாத செய்திதான். அந்த சமூகம் மட்டுமில்லை இன்னும் பல சமூகங்களும் பெண் களுக்கு கோவிலின் பேரில் பொட்டுக்கட்டும் வழக்காறு கொண்டிருந்தனர் என்பது அறிய வேண்டிய ஒன்று. பெரியார் நாதஸ்வரம் வாசிப்பவர் தொடர்பாக வைக்கும் வாதம் அவை:

1. நாதஸ்வரம் வாசிப்போர் தாம் செய்யும் தொழிலை மரியாதைக்குரியது அல்ல என்று கருதி சுயமரியாதை இன்றி தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்கின்றனர். நாதஸ்வர வித்வான் சங்கீத ஞானமே இல்லாத தற்குறியைக்கூடக் கண்டு கூனிக் குறுகுவதை கண்டிக்கிறார். ஒடுங்குவதும் கும்பிடுவதும் தனது குலதர்மம் என எண்ணுகின்றனரா எனக் கண்டிக்கின்றார்.

2. 350 ரூபாய் சம்பளம் பேசி, இரண்டாம் வகுப்பு இரயிலில் வந்திறங்கும் நாதஸ்வர வித்வான், வியர்வையைத் துடைக்கக்கூடத் தோளில் துண்டு போடக்கூடாதென தடை செய்யும் இதரசாதியினரின் 'சாதி இழிவு' நடவடிக்கையையும் கண்டனம் செய்கிறார். ஒரு பார்ப்பனன் ஒத்து ஊதினாலும், நட்டுவாங்கம் செய்தாலும் ஸ்வாமி என்று விளிப்போர் ஒரு நாகஸ்வர வித்வானுக்கு குறைந்தபட்ச மரியாதையை மறுப்பதை இடித்துரைக்கிறார்.

3. செங்குந்தர் பொதுநலன் அபிவிருத்திக்கு உழைக்கும் 'குல அபிமானிகள்' இந்தத் தொகுதியினரினை தங்களது இனத்தின் பகுதி யாகக் கருதாததையும், அவர்களது நலனைக் கவனிக்கத் தவறுவதையும் விமர்சிக்கிறார்.

இந்தத் தொழிலும் சாதியும் வேறு வேறு வடிவங்களிலும் பரிமாணங்களிலும் செயல் படுவதை அறிவதற்கு பெரியார் சாதிசங்க உரைகள் உதவுகின்றன. செங்குந்தர்களில் நாதஸ்வரம் வாசிப்பவர்கள் 'எளியராகிப்' போவதைக் கண்டோம். இன்னொரு தளத்தில் அவர்கள் மேட்டிமைவாதிகளாகி தங்களின் மற்றொரு நீட்சியாகிய 'மருத்துவர்களை' (நாவிதர்களை) இழிவாக நடத்துவது குறித்து 'மருத்துவ குல மகாநாட்டு உரையில்' பெரியார் குறிப்பிடுகிறார். அதாவது இங்கு நாதஸ்வரம் வாசிப்பவர்களும், மருத்துவர்களும் ஒரே சாதியக் குழுவாக இருந்தும், முதல் வகையினர் 'நாவிதர்களை' தங்களின் இனத்தவராகக் கருதாத சாதி வேற்றுமை / இழிவு குறித்த புகார் மருத்துவ குல மாநாட்டில் வைக்கப்படுகிறது. அதற்கு எதிர்வினையாற்றும் பெரியார் மருத்துவர்களுக்கு சார்பாகப் பேசி நாதஸ்வர வித்வான்களைக் கண்டிக்கிறார். இந்த ஆதரவு தொடர்பாக அவர் கரூர் சவரக் கடைகளில் "இங்கு நாதஸ்வர வித்வான்களுக்கு அனுமதி கிடையாது" என எழுதப்பட்டிருப்பதைத் தான் கண்டதாகவும், அதை ஆதரிப்பதாகவும், தமிழ்நாடு முழுதும் அதைக் கடைப்பிடித்து வித்வான்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டு மென்கிறார். சாதிக்குள், சாதிகளுக்குள் 'இழிவு' என்பதை எந்த வகையிலும் ஏற்க முடியாது. அதை ஒழிப்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான நோக்கம் என்கிறார்.

இந்தப் புள்ளியில் சாதிகள் குறித்த அடிப்படை புரிதல்கள் சில. இந்தப் புரிதல்கள் சாதியைக் கடப்பதற்கும், அதன் பொருளற்ற தன்மையினை விளக்கவும் உதவலாம். மேற் சென்ற பத்திகளிலேயே சாதிகள் / தொழில்கள் கடந்து போவதைக் காண முடிகிறது. செங்குந்தர் சாதியினரில் ஒரு பிரிவினர் நாதஸ்வரம் வாசிப்பவர்களாய் இருப்பதையும், அதே வேளையில் மருத்துவர் குலத்தின் ஒரு பிரிவினர் அதே நாதஸ்வரம் வாசிப்பவர்களாக இருப்பதும் அறியக் கிடைக்கிறது. இஃதன்னியில் இசை வேளாளர் என்ற தொகுதியில் இவர்கள் இணைவதையும் காண முடிகிறது. இதேபோல வன்னியர் சாதியின் ஒரு பிரிவினரான பள்ளிகளும் பள்ளர்களும் ஒட்டியும் வெட்டியும் சாதிகளாக இயங்குவதை சென்சஸ் ஆவணங்களில் காண முடிகிறது. அதேபோல் வடமாவட்டத்து முதலிகளும் (அகமுடைய

> **நாகஸ்வரம் வாதிப்பவர்களும் நாவிதர்களும் ஒரே ஜாதியில் தனித் தனிப் பிரிவு என்றாலும் ஒருவரையொருவர் தாழ்த்திக் கொண்டதை - அவர்கள் ஜாதி மாநாட்டிலே சாடினார் பெரியார்.**

முதலிகள்) முக்குலத்து அகமுடையச் சேர்வைகளும் இணைவதும் விலகுவதுமான தடயங்கள் காணக் கிடைக்கும். இது முடிவான பட்டியலன்று. இது பெரும் ஆய்வுக்கான தொகுதி. அகழ்ந்து ஆய்வு செய்தால் இனக்குழு சமூகங்கள் சாதிகளான கதை எளிதில் வெளிப்படும். அனைத்து சாதிகளும் இனக்குழு சமூகங்கள் மட்டுமே என்பது தெளிவாகும். தமிழ்ச் சமூகம் 'சாதிய' சமூகமானது பார்ப்பனிய மநுவின் சதியால் என்பதும் இன்னும் தெளிவாகும். ஆய்வாளர் நொபொரு கராஷிமா அவர்களின் 'சோழர் காலம் வரை சாதி போன்ற இனக் குழுக்கள்தான்' இருந்தன என்னும் முக்கியமான ஆய்வு மேலுள்ள வாதத்தை வலுப்படுத்துகிறது.

### வன்னியகுல ஷத்திரியர் மகாநாடு

சேலம் வன்னியகுல ஷத்திரியர் மாநாட்டு பெரியார் உரை மிக அபூர்வமானது.............. பெரியார் நிகழ்த்திய உரையின் சாராம்சம் பின்வருவது:

> வன்னிய சமூகம் தென்னிந்தியாவில் ஒரு பெரிய சமூகமாக இருக்கிறது. நாட்டிற்கு மிக முக்கியமான விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வரும் சமூகம். எனவே உங்கள் சமூக நன்மைக்காக திட்டமிட மகாநாடுகள் அவசியம். இந்த மகாநாட்டை திறந்து வைக்கும் பெருமை பெற்ற நான் இந்த வேளையில் சில விடயங்களைச் சொல்ல நினைக்கிறேன். புராணக் குப்பைகளிலிருந்து ஆதாரம் தேடி உங்கள் சமூகத்தைப் புகழ்ந்து விட்டுப் போக நான் இங்கு வரவில்லை. நான் எந்தத் துறையில் எந்தக் கொள்கைகள் தொடர்பில் வேலை செய்து, சமூக முன்னேற்றம் பற்றிப் பேசி வருகிறேனோ அது தொடர்பில்தான் பேச உள்ளேன். நான் சொல்லும் விடயங்கள் உங்கள் மனதிற்கு சங்கடத்தை ஏற்படுத்தலாம். பல பிடிக்காமலும் இருக்கலாம். எப்படி இருந்த போதிலும் நான் சொல்லும் சொற்களை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென கூறவில்லை. நான் சொல்வனவற்றை ஆராய்ந்து உங்கள் புத்திக்கு எது சரி என்று பட்டால் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லையேல் தள்ளி விடுங்கள். பொதுவாக இதுபோன்ற சாதி மாநாடுகள் கூட்டுவது தங்கள் சாதிப் பெருமைகளைப் பேசுவதற்கானதாகவும், அவரவர் சாதி மட்டும் தனியாகவே பிரிந்திருக்கும்படி சாதி உயர்வையே பேசிக் கொண்டிருப்பதற்காக இருக்கக் கூடாது.
>
> இம் மகாநாட்டின் பயனாகவாவது உங்களுக்கு மேல் ஜாதி ஒன்று இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் நீங்கள் சில ஜாதிக்கு மேலானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.
>
> ஏனெனில் நீங்கள் சில சாதிகளுக்கு மேலானவர்கள் என எண்ணும்போதே நீங்கள் சில சாதிகளுக்குக் கீழானவர் என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள். உங்கள் சாதி உயர்வுக்கான கோரிக்கை இதனால் எதிர்விளைவாக உங்களை கீழ் சாதிப் பட்டத்தோடு நிலைக்கச் செய்து விடுகிறது. அதனால் நீங்கள் மேல் சாதி என்ற தத்துவம் சிக்கலாகிவிடுகிறது.
>
> உதாரணமாக இப்பொழுது நீங்கள் உங்களை வன்னியகுல ஷத்திரியரென்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். இதனால் நீங்கள் தங்களை பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டத்தாராகிய பார்ப்பனர்களுக்கு கீழ்ப்பட்ட ஜாதியார் என்பதை சிறிதும் எதிர்வாதமில்லாமல் ஒப்புக்கொண்டவர்களாகி விட்டீர்கள். ஆனால் உங்கள் ஷத்திரியத் தன்மையாலோ தகராறுகளுக்கு குறைவில்லை. நீங்கள் வன்னியகுல

> **சாதி மாநாடுகள் கூட்டுவது தங்கள் சாதிப் பெருமைகளைப் பேசுவதற்கானதாகவும், அவரவர் சாதி மட்டும் தனியாகவே பிரிந்திருக்கும்படி சாதி உயர்வையே பேசிக் கொண்டிருப்பதற்காகவும் இருக்கக் கூடாது.**

*ஷத்திரியரென்றால் நாடார்கள் தங்களை அக்கினிகுல ஷத்திரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பூணூல் கயிறும் உங்கள் பூணூல் கயிற்றைவிட கொஞ்சமும் இளைத்ததல்ல. ஆனால் நாடார்கள் ஷத்திரியர்கள் என்று ஒப்புக் கொள்ளாமல் இழிவார்த்தை என்று நீங்கள் கருதும் ஒரு பெயரைச் சொல்லி உங்களைக் கூப்பிடுகிறார்கள். நீங்களும் அதுபோலவே நாடார்களை ஷத்திரியர் என்று ஒப்புக் கொள்ளாமல் இழி வார்த்தை என்று அவர்கள் கருதும் ஒரு பேரைச் சொல்லி அவர்களை நீங்கள் கூப்பிடுகிறீர்கள். நாயுடு ஜாதி எனும் எங்கள் ஜாதிக்காரர்கள் உங்கள் இருவரையும் ஷத்திரியர்கள் அல்ல என்று சொல்லி விட்டு தாங்கள்தான் ஷத்திரியர் என்கிறார்கள்.*

*ராஜா என்கின்ற மற்றொரு ஜாதிக் காரர்கள் நீங்கள் மூன்று பேரும் ஷத்திரியர் அல்ல, நாங்கள்தான் ஷத்திரியர்கள் என்கிறார்கள். இதுபோல் இன்னமும் குடகு ஷத்திரியர்கள், எத்தனையோ பேர். ஷத்திரியப் பட்டத் திற்கு இத்தனை பேர்கள் ஒருவருக்கு ஒருவர் போட்டியும், சண்டையும் போட்டுக் கொள்ளுகிறார்களே ஒழிய இதன் பலனாய் எச்சில் கிண்ணம் கழுவு பவனுக்கும், பிச்சை எடுத்து வாழு பவனுக்கும், தரகு வேலை செய்பவனுக்கும் நோகாமல் பிராமணப் பட்டம் கிடைத்து விட்டது" என்று பேசியிருக்கிறார்.*

இதுபோன்ற இழிவானதும் அர்த்தமற்ற துமான நாங்கள் உயர்ந்த ஜாதி அவர்கள் தாழ்ந்த ஜாதி என்ற சண்டைகள் போடுவதற்கும், பிற சாதியினரைச் சாடை பேசுவதற்குமாகவே அப்போது சாதி மாநாடுகள் கூடின. அந்த நோக்கங்களை முறியடித்து அவற்றைச் சமூக முன்னேற்றத்திற்கான போக்குகளாய் மாற்றிடவே பெரியார் சாதி சங்கங்களில் உரையாற்றினார். வன்னியர்கள் நாடார்களை 'சாணார்கள்' என்று கூறி இழிவு பேச அவர்கள் (நாடார்கள்) இவர்களை 'பள்ளிகள்' என்றழைப்பதுமாய் நிகழ்ந்து வந்ததைக் குறிப்பிடுகிறார் பெரியார். இந்தச் சண்டை மற்றும் இதர சாதிகளிடையே நடந்த சண்டைகள் தொடர்பாக 1850களிலிருந்து 1900 வரை பல நூறு நூல்கள் வெளியாகியதற்கான தரவுகள் இருக்கின்றன. உள்ளபடியே சாதிகள் தங்கள் பெருமையைப் போலவே பிற சாதிகள் குறித்து இழிவாகப் பேசுவதையும் சாதி நூல் எழுதுதலின் முதன்மை நோக்கமாகக் கொண் டிருந்தன. இதில் பெரும் வேடிக்கை, தங்களளவில் நூல் எழுதும் அளவிற்கு கல்வி பெற்றவரைப் பெறாதவர்களாகவே பெரும் பாலான இடை மற்றும் கடைச் சாதியினர் இருந்தனர். அவர்களுக்கான பல நூல்களை பார்ப்பன மற்றும் உயர் சாதி பண்டிதர்களே எழுதிக் கொடுத்தனர் என்பதுதான்.

பெரியாரின் அக்கறை மேற்படி பார்ப்பன நடவடிக்கை தொடர்பிலானதுதான். ஒரு புறம் பெரும் பணம் பெற்றுக் கொண்டு சாதி நூல்களில் ஷத்திரியர், வைசியர், சத்சூத்திரர் என்று எழுதிக் கொடுத்துவிட்டு, மறுபுறம் பிராமண சனாதன மாநாடுகள் கூட்டி அவற்றில் இவர்கள் யாரும் ஷத்திரியர், வைசியர் என்ற வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. அனைவரும் 'சூத்திரர்' மட்டுமே என்று தீர்மானம் நிறைவேற்றினர் என்பதுதான். இவர்களின் சூது அறியாமல் பள்ளர்கள் தங்களைத் தேவேந்திர வேளாளர்கள் என்றும், சௌராஷ்டிரர்கள் தங்களை சௌராஷ்டிர பிராமணர் என்றும், தேவாங்கர்கள் தங்களைத் தேவாங்க பிராமணர்கள் என்றும், குயவர்கள் தங்களைக் குலால விஸ்வ பிராமணர்கள் என்றும், சாலியர்கள் தங்களைச் சாலிய பிராமணர்கள் என்றும் கோரிக்கை வைத்தனர். பெரியார் இவர்களைக் குறிப்பிட்டு உடல் உழைப்பு

சார்ந்து நியானமான வாழ்க்கை வாழும் இவர்கள் தங்களை பிராமணன், இந்திரன், அருந்ததி, சந்திரன் என்று பல ஒழுக்கமற்ற சோம்பேறிப் பட்டங்களை வைத்துக் கொள்வதை கடுமையாக விமர்சிக்கிறார்.

> "சாதி சம்பிரதாயப்படி இல்லை என்று யாராவது உங்களிடம் சொன்னால் அவர்கள் மூடர்கள் அல்லது அயோக்கியர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதேபோல் சாதி தொழில் அடிப்படையில் உருவானது என்று சொல்பவர்களும், அது அப்படித் தானே இருந்தாக வேண்டும் என்பவர்கள் அறியாதவர்களும், ஏய்க்க வந்தவர்களு மாகும்.
>
> ஆகவே பிராமணன், ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்று சொல்லுகின்றவர்களும், அந்தணர், அரசர், வணிகன், வேளாளர், குடிமக்கள் என்று சொல்லுகிறவர்களும், இவர்கள் பிறவியினால் வந்தவர்கள் என்று சொல்லுகிறவர்களும், இவர்கள் தொழி லினால் வந்தவர்கள் என்று சொல்லு கிறவர்களும், ஒரே மாதிரியானவர்களே தவிர இவர்களில் அறிவாளிகளோ அல்லது யோக்கியர்களோ இருக்க முடியாது என்று சொல்லுவேன்" என்கிறார்.

இறுதியாக, "இனி இம்மாதிரியான சமூக மாநாடுகளில் இம்மாதிரியான சாதி உயர்வு தாழ்வு பற்றிய பேச்சே இருக்கக் கூடாது" என்றும், "மற்ற சாதியார் என்பவர்களுடன் நாம் எப்படிக் கலப்பது? நாம் எவருக்கும் கீழ்சாதி அல்ல என்கின்ற தன்மையை எப்படி அடைவது? நமக்குக் கீழும். நமது நாட்டில் எந்த சாதியும் இல்லை. நாம் எல்லோரும் சமமே என்கின்றதான சமதர்ம நிலையை எப்படி உண்டாக்குவது என்கின்ற காரியத்திற்கே பாடுபட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்" என்று முடிக்கிறார். ஒரு வன்னியகுல ஷத்திரிய சங்க மாநாட்டில் இதனை விலாவாரியாக அவர்கள் குறித்த விமர்சனப் பார்வையையும், சாதிய சமூக இருப்பையும் தெளிவாக விவரித்து, இதற்கான காரணமான பார்ப்பனியத்தையும் அடையாளப் படுத்தி 1930ஆம் ஆண்டுகளில் பேசிட பெரியார் ஒருவரால் மட்டுமே முடிந்திருக்கிறது. இதுதான் ஆச்சர்யமான உண்மை.

## சாதி சங்க மாநாடுகளும் சாதிகளும்

பெரியார் பங்கேற்ற சாதி சங்க மாநாடுகள் பெரும்பான்மையாக அடித்தட்டு ஒடுக்கப்பட்ட சாதிகளாகவும், சாதியத்தின் பிடியில் சிக்கி அநீதி இழைக்கப்பட்டவைதாம். அந்த சாதியினரின் சாதி இழிவு எதிர்ப்புப் போர் வெகுகாலமாக நிகழ்ந்து வருபவையாகவும் இருப்பதைக் காண முடிகிறது. அவற்றில் இடைச்சாதியினராகக் கருதப்பட்ட வன்னியர், செங்குந்தர் ஆகியோரும் அதன் பகுதியாக நிலவிய சாதி இழிவு அடையாளத்தை உதறிவிட்டு வெளியேறும் எத்தனம் கொண்டே இந்த நடவடிக்கைகளில் இறங்கினர். வன்னியர்களுக்கு 'பள்ளி'ப் பிரிவு தொடர்பிலான சங்கடம்தான் ஷத்திரிய அடையாளம் கோர வைத்திருக்கும் வாய்ப்புள்ளது. செங்குந்தர்களின் சிக்கலான முகம் அதன் பொட்டுக்கட்டும் மற்றும் நாயனம் வாசிக்கும் சாதியினராய் இருப்பது. இது தவிர்த்து நாடார்கள் நீண்ட போராட்டம் மற்றும் வணிகப் பொருளாதார வல்லமையால் தொடர்ந்து சாதி இழிவிற்கெதிராய் களம் கண்டவர்கள். ஆனால் மேற்படி வன்னியர், நாடார், செங்குந்தர், கவுண்டர் போன்ற சாதியினரின் சாதி சங்க முன்னெடுப்பின் கவனத்திற்குரிய கூறு பார்ப்பனிய எதிர்ப்பையும் கொண்டது. வேடிக்கை, பார்ப்பனிய எதிர்ப்பின் இன்னொரு முனையில் அதே பார்ப்பனியத்தின் வர்ணச் சட்டகத்தில் இடம் கோருவதாகவும் இருந்தது. ஆக அடிப்படையில் தாழ்த்தப்பட்ட சமூகங்கள் சாதிய இழிவு களையவும், இடைச் சாதி சமூகங்கள் சாதிய மேன்மையாக்கமும் அதிகாரமும் நோக்கி, தங்கள் சாதி சங்க நடவடிக்கைகளை கட்டமைத்தனர். பெரியார் தனக்கேயான பாணியில் சாதியத்தின் காரணியை அடையாளம் காட்டி, எளிமையான சொற்களிலும் வாதங்களிலும் கடுமையான விமர்சனங்களை முன் வைத்தார். இந்துமதத்தையும், அதன் ஆணி வேரான பார்ப்பன வேத சாஸ்திரங்களையும், கடவுள் என்ற கருத்தாக்கத்தையும் ஒரு சேர ஒழித்து

விடுவதே வழி எனச் சொன்னார். அதைவிட உனக்கும் மேலே ஒரு சாதியோ அல்லது கீழாக ஒரு சாதியோ இல்லை என ஏற்பதும், அதை நடைமுறைப்படுத்தலுமே வழி என்றார். தாழ்த்தப்பட்டவர் சாதி இழிவிலிருந்து விடுதலை பெற அவர்களுடைய சுயமான தீர்மானமான முயற்சியே உதவ இயலும். பிறரோ, நானோ பெரிய அளவில் அதைச் செய்ய முடியாது என்றார் பெரியார். உங்களை ஏமாற்றும் மதத்தை, கடவுளை மறுத்து, உங்களை அனுமதிக்காத கோவிலைத் தவிர்த்து, உன்னிடம் அதிகாரம் செலுத்த நினைப்பவனிடம் இனி அது ஒரு போதும் நடக்காது என அறிவியுங்கள் என்றார் பெரியார். இடைச்சாதி சாதி மேலாதிக்க விருப்பம் கொண்டவர்களிடம் உங்களை நீங்களே ஏன் இழிவுபடுத்திக் கொள்கிறீர்கள் என விமர்சனம் செய்து, உங்களுக்குக் கீழ்சாதி என்று ஒன்றை நீங்கள் கருதும்போதே நீங்கள் இன்னொருவருக்கு கீழ்சாதி என்பதை ஒப்புக் கொண்டவராகிறீர்கள் என அறிவுறுத்தினார். பெரியார் இடைச்சாதிகளின் ‘சூத்திர’ இழிவு குறித்து பேசாத கூட்டமில்லை எனச் சொல்ல வேண்டும். ●

## தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் பிரகடனம்



*“விழித்துக் கொண்டே ஒரு கனவு கண்டேன். அதில் நான், கட்சி, தமிழினம், நாடு, உலகம் இவை அனைத்தும் புத்தம் புதியதாய், பேரழகாய் மகிழ்ச்சியில் வாழ்வதைக் கண்டேன்.*

*காலத்தின் மாற்றங்களுக்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ளாத விலங்கோ, இனமோ இந்த மண்ணில் நீடித்திருப்பதில்லை. மாற்றங்கள் நம்மில் இருந்தே தொடங்கட்டும்.*

*இன்று நீங்கள் பார்க்கும், கேட்கும் மு.க. ஸ்டாலின் ஆகிய நான், புதிதாய் பிறக்கிறேன். இது வேறு ஒரு நான்.*

*தி.மு.க.வின் மரபணுக்களோடும், நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் கனவுகளோடும் உங்கள் முன்னால் பிறந்திருக்கிறேன்.*

*எதிர்காலத்தில் தி.மு.க.வினர் என்பவர் யாராக இருப்பர் என்றால், தன் ஜாதியே உயர்ந்தது என்று நினைப்போர் அல்ல. உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரையும் தன் உடன்பிறப்பாக நினைப்போரும், எளியோருக்குக் கரம் கொடுப்போரும் தான்.*

*நாம் கடவுள் எதிர்ப்பாளர்கள் அல்ல. நாம் நம்பவில்லை எனினும் பிறரின் நம்பிக்கையை மதிப்போர். யார் தவறு செய்தாலும் அது நான் என்றாலும் அதை எதிர்த்துக் குரல் கொடுப்போர் தான் தி.மு.க.வினர்.*

*அந்த அழகான எதிர்காலத்தில் தி.மு.க. கொள்கைகள் என்ன?*

*பகுத்தறிவின் மூலம் உலகைக் கண்டு, அதை உரக்கச் சொல்லுதல், ஆணுக்கு பெண் இங்கு சமம் என மதித்தல்; திருநங்கையர், மாற்றுத் திறனாளிகளுக்கு சமூகத்தில் சம உரிமை பெற்றுத் தருதல்; தனி மனித மற்றும் ஊடகக் கருத்துச் சுதந்திரத்தை மீட்டெடுத்தல்; கருத்துச் சுதந்திரத்தைப் போற்றிப் பாதுகாத்தல்; பிறமொழிகளை அழித்து இந்தியா முழுவதுக்கும் மதச்சாயம் பூச நினைக்கும் கட்சிகளை எதிர்த்தல்; இவை எல்லாம் என் நீண்ட கனவின் சில துகள்கள்.*

*இந்த எதிர்காலம் தூரத்தில் இல்லை. இதோ இந்த நொடியிலிருந்து மெய்ப்படப் போகிறது.*

*இது என் கனவு மட்டுமல்ல, தி.மு.க.வின் கனவும். இந்தக் கனவு மெய்ப்பட வா! என்று தொண்டர்களை அழைக்கிறேன்.*

*இந்தியா முழுவதும் காவி வண்ணம் அடிக்க நினைக்கும் மோடி அரசுக்கு பாடம் புகட்ட வா!*

*முதுகெலும்பில்லாத இந்த மாநில அரசைத் தூக்கி எறிய வா!*

*நான் முன்னே செல்கிறேன். நீங்கள் பின்னே வாருங்கள் என்று அழைக்கவில்லை. நாம் அனைவரும் சேர்ந்தே செல்வோம்.”*

- தி.மு.க. பொதுக் குழுவில் தலைவர் பதவி ஏற்றவுடன் நிகழ்த்திய உரையிலிருந்து



# அணுக் கழிவுகளை 1 இலட்சம் ஆண்டுகள் பாதுகாக்க வேண்டும்

● சுந்தர்ராஜன்

**அணுவைக்கூட செயலிழக்க வைத்துவிடலாம். ஆனால் அணுக் கழிவுகளை கையாள்வதற்கான தொழில்நுட்பம் உலகத்தின் எந்த நாட்டிலும் கிடையாது. ஆனால் இந்திய அரசு அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, எந்தெந்த தொழில்நுட்பங்களை உலக நாடுகளில் சோதனை செய்யவில்லையோ அந்த அணு உலைகளை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்கான வேலைகளில் இறங்கியுள்ளது.**

2000 வருடங்களாக மனிதர்களுக்குள், நாடுகளுக்குள் ஏன் போர் வருகிறது என்றால் அடிப்படையில் அவை எல்லாமே வளங்களுக்கான போர்தான். பெட்ரோலியப் பொருட்களின் தேவைக்காகத்தான் அமெரிக்கா ஈராக் மீது குண்டு வீசியது. கர்நாடகாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் தண்ணீருக்கானப் பிரச்சினை. இந்தியாவுக்கும், வங்க தேசத்துக்கும் கங்கை நதியில் பிரச்சினை. ஆக பல்லாயிரக்கணக்கான வருடங்களாக மக்களுக்கு வளங்கள்தான் சண்டைக்கான காரணமாகவுள்ளது. அது பெட்ரோல், தண்ணீர், தாதுக்கள் என்று எந்த வளமாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதேபோல, புவிசார் அரசியலும் சண்டைக் குரிய காரணியாக மாறும். அதுதான் ஈழத்தில் நடந்தது. அங்கே தமிழர்களின் பகுதியில் திரிகோணமலையில் இருக்கிற வளங்களை சுரண்டத்தான் உலக நாடுகள் மிகப் பெரிய தாக்குதலை நடத்தி தமிழர்களை அழித்தார்கள். இது புவிசார் அரசியல்.

1990, 1991ஆம் ஆண்டுகளில் இந்தியா LPGயை (Liberalized, Privatized, Globalized- தாராளமயம், தனியார்மயம், உலகமயம்) ஏற்றுக் கொள்ளத் தயாரானது. அவர்கள் வெளிநாட் டிலிருந்து தொழில் செய்ய மட்டும்தான் இங்கு வந்தார்கள் என்று கருதக்கூடாது. தமிழ் நாட்டிலும் நிறைய தொழில் முனைவோர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல், அவர்களின் மூலதனத்திற்கு இணையாக மூலதனம் செய்ய இயலாமல் தொழிலை விட்டு வெளியேறினார்கள். நிறுவனங்களை விற்று விட்டார்கள். இன்று நாம் குடிக்கிற தண்ணீர் பாட்டிலிலிருந்து, பார்க்கிற தொலைக்காட்சி வரையிலும் பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களாகி விட்டன.

இவர்கள் பொருட்களை உற்பத்தி செய்து, விற்கக்கூடிய சந்தையாக மட்டுமே தமிழ் நாட்டைப் பார்க்கவில்லை. சமீபத்தில் நடந்த ஒரு மிகப்பெரிய போராட்டம் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரானப் போராட்டம். அந்த ஆலைக்குத் தேவையான முக்கிய ஆதாரம் தாமிர தாதுக்கள். இதை ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்கிறார்கள். அங்கிருந்து இறக்குமதி செய்து இங்கே எடுத்து வந்து தயாரிப்பது அதிக லாபம் தரும் தொழில் முறை கிடையாது. இங்கே நெய்வேலியில் நிலக்கரி எடுத்து சுரங்கத்திற்கு அருகிலேயே மின்சாரம் தயாரிக்கிறார்கள். இதுதான் எளிமையான வழி.

இதை பிட் ஹெட் (PIT-Head) என்று சொல்லு வார்கள். இதுதான் உலகம் முழுவதும் பின்பற்றும் வழக்கமான முறையாக உள்ளது.

ஆனால் ஆஸ்திரேலியாவில் தாமிரம் எடுத்து வந்து தூத்துக்குடியில் உருக்காலை அமைக்கக் காரணம், இந்த ஆலையை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் நிலம், நீர், காற்று முக்கியம் என்று கருதுகிறார்கள். இந்த ஆலையை முதலில் அமைக்கத் திட்டமிட்டது அல்போன்சா மாம்பழங்கள் அதிகளவில் உற்பத்தியாகும் மகாராஷ்டிரா மாநிலத்தின் ரத்தினகிரியில்தான். இந்த மாம்பழங்கள் அதிகமாக ஏற்றுமதிதான் செய்யப்படுகிறது. இதனால் ஆலை அமைந்தால் மாம்பழங்கள் அனுப்ப வேண்டாம் என ஐரோப்பியர்கள் கூறியதையடுத்து உள்ளூர் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் குதித்தனர். கையில் கடப்பாரைகளுடன் சென்று ஒரு வருடமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருந்த ஆலையை இடித்தனர். இதையடுத்து சரத் பவார் தலைமை யிலான அம்மாநில அரசு அங்கு ஸ்டெர்லைட் ஆலை அமைக்கும் திட்டத்தை கைவிட்டது.

அதற்குப் பிறகு அன்றைய ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு ஸ்டெர்லைட் ஆலையை தூத்துக்குடிக்கு கொண்டு வந்தது. தமிழ்நாட்டிலும் ஆலைக்கு எதிராக அன்றைக்கே தாமிரம் கொண்டுவரப்பட்ட கப்பல்களை முற்றுகையிட்டு மீனவ மக்கள் போராட்டம் நடத்தினார்கள். மகாராஷ்டிரா வில் போராட்டம் நடந்தபோது, இடித்தபோது யாரும் எதுவும் சொல்லவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் நடக்கும்போது மட்டும் தமிழ்நாட்டுக்கு இனிமேல் தொழிற்சாலைகளே வராது, போராட்ட பூமியாக தமிழ்நாடு மாறிவிட்டது என்று சொல்கிறார்கள்.

**உலகத்திலேயே அதிசிறந்த யுரேனியம் இருப்பது ஆஸ்திரேலியாவில் தான். உலகின் ஒட்டுமொத்த யுரேனியத்தில் 27 விழுக்காடு ஆஸ்திரேலியாவில்தான் இருக்கிறது. ஆனால் அங்கு ஒரு மெகா வாட் கூட அணு மின்சாரம் தயாரிப்பதில்லை.**

ஏனென்றால் எங்களுக்கு சுற்றுச்சூழல் முக்கியம், நிலம், நீர், காற்று முக்கியம் என்று அந்நாட்டு அரசு கூறுகிறது. ஆனால் அந்த நாட்டிலிருந்து யுரேனியம் இறக்குமதி செய்து நம் நாட்டில் அணு மின்சாரம் தயாரிக்க மோடி அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. உலகம் முழுவதும் வளங்கள் இருந்தாலும் கூட அந்த வளங்களைக் கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்ய தமிழ்நாடு போன்ற பகுதிகள் தேவைப்படுகிறது. இங்குதான் சுற்றுச்சூழலைப் பற்றி எந்தக் கவலையும் அரசுக்கு இல்லை.

நான் பள்ளி, கல்லூரி படித்த காலங்களில் குடிக்கிற தண்ணீரை பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலை வரும் என்று எண்ணியதுகூட இல்லை. எங்காவது பேருந்து நிலையங்களில், பொது இடங்களில் தண்ணீர் தொட்டிகள் வைத்து நீர் வைத்திருந்தால் நாம் குடிக்க மாட்டோம். அந்தத் தண்ணீர் குடிக்க சுத்தமானது இல்லை என்ற எண்ணத்தை நமக்குள் விதைத்துவிட்டார்கள். இப்படி தண்ணீர் ஒரு வணிகப் பொருளாக உருவாக்கப் பட்டது 1990க்குப் பிறகுதான். எங்கே சென்றாலும் கடைகளில் பாட்டில் தண்ணீரை வாங்கித்தான் அனைவரும் பயன்படுத்துகிறோம். வீடுகளிலும் ஆர்.ஓ. சுத்திகரிப்பு இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

டெல்லியில் காற்று மாசு பெருமளவிற்கு அதிகரித்திருக்கிறதை செய்திகளில் பார்க் கிறோம். டெல்லியைப் போலவே சென்னை யிலும் அதே அளவு காற்று மாசு இருக்கிறது. ஆனால் டெல்லியைப்போல ஏன் சென்னையில் பாதிப்பு இல்லையென்றால், அதற்கு முக்கிய மான காரணம் சென்னையில் கடல் இருக்கிறது. காற்றில் கலந்திருக்கிற கார்பனில் 30 விழுக்காடு அளவுக்குக் கடல் உள்வாங்கிக்கொள்ளும். இதே காரணம்தான் மும்பைக்கும், கொல்கத்தாவுக்கும். ஆனால் டெல்லியிலும், பெங்களூரிலும் கடல் இல்லை. அதனால்தான் காற்று மாசுபாட்டால் தத்தளிக்கின்றன.

இன்றைக்கு கோபாலபுரத்தில் ஆக்சிஜன் பார்லர் வந்துவிட்டது. 5 வருடம் கழித்து உடல் நிலை சரி இல்லை என்று மருத்துவமனைக்கு சென்றால் மருந்து மாத்திரைகள் மட்டுமின்றி ஆக்சிஜன் பார்லருக்கு சென்று 1 மணி நேரம் சுத்தமான ஆக்சிஜனை சுவாசிக்க வேண்டு

மென்றும் சொல்லுவார்கள். டெல்லியில் எல்லா வீடுகளிலேயும் காற்று சுத்திகரிப்பான் (Air Purifier) வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். தண்ணீரும், காற்றும் அடிப்படை வளம். இவற்றை நமக்கே தெரியாமல் வணிகப் பொருளாக்கி நம்மீது திணிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அவ்வளவு சேட்டிலைட் வசதிகளை வைத்திருக்கிற அமெரிக்கா ஏன் திருப்பூரி லிருந்து ஆடைகள் இறக்குமதி செய்கிறது? ஆடி, பென்சு என விதவிதமான கார்களையும், பொறியியல் இயந்திரங்களையும் உற்பத்தி செய்கிற ஜெர்மனி, இத்தாலி நாடுகள் ஏன் காலணிகளை ஆம்பூர், வாணியம்பாடியிலிருந்து வாங்குகிறார்கள் என்று நாம் யோசித்திருக் கிறோமா? இன்றைக்கு ஹுண்டாய், ஃபோர்டு கார் நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்ய வருகின்றன. இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்வதில் சுமார் 20 விழுக்காடு கார்களை மட்டும்தான் இங்கு விற்கின்றன. 80 விழுக்காடு வரை ஏற்றுமதிதான் செய்கின்றன.

இதற்காகவே சென்னை துறைமுகத்தை கார் ஏற்றுமதிக்கு மட்டுமானதாகவே மாற்றி விட்டார்கள். முன்பெல்லாம் நிலக்கரி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இந்தத் துறைமுகத்தில் கையாளப்பட்டது. இவை யெல்லாம் என்ன காட்டுகிறது என்றால் இவற்றைத் தயாரிக்க தண்ணீர் தேவைப்படு கிறது. ஒரு கார் தயாரிக்க 4 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவை. உள்ளாடை தயாரிக்க 2,700 லிட்டர் தண்ணீர் தேவை. ஒரு ஜோடி செருப்பும், ஷூவும் தயாரிக்க 16,000 லிட்டர் தண்ணீர் வேண்டும். இதனால்தான் தங்கள் மக்களுக்குத் தேவையான வளங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு அமெரிக்காவும், ஜெர்மனி யும், இத்தாலியும் இங்கிருந்து இவற்றை வாங்கிக் கொள்கின்றன.

உலகத்திலேயே மாசடைந்த நதிகளில் ஒன்று பாலாறு. ஆம்பூர், வாணியம்பாடி தோல் கழிவுகள் இந்த ஆற்றில்தான் கலக்கிறது. உலகம் முழுக்க அணையைத் திறக்க சொல்லி விவசாயிகள் போராடி கேள்விப்பட்டிருப்போம். ஆனால் அணையைத் திறக்கக்கூடாது என்று விவசாயிகள் போராடி கேள்விப்பட்டதுண்டா? திருப்பூர் ஒரத்துப்பளையம் விவசாயிகள் இப்படிப் போராடினார்கள். இந்த அணை நொய்யல் ஆற்றில் கட்டப்பட்டது. திருப்பூர் பனியன் கம்பெனிகளின் கழிவுகள் கலந்து நொய்யல் ஆற்றுத் தண்ணீர் மாசடைந் துள்ளதால்தான் விவசாயிகள் ஒரத்துப் பாளையம் அணையைத் திறக்க வேண்டாம் என்கின்றனர். இந்தப் பகுதிகளில் புற்றுநோயும் மிக அதிகமாக இருக்கிறது.

1978ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரு அணு உலை விபத்துக்குள்ளானது. அதற்குப்பின் இன்றுவரையில் அமெரிக்காவில் புதிதாக ஒரு அணு உலை கூட அமைக்கவில்லை. ஆனால் இந்தியாவில் அமைக்கிறார்கள். இந்தியாவிலும் கூட எங்கு அமைக்கிறார்கள் என்பதை வேறு படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் இந்திய அமெரிக்க ஒப்பந்தத்தின்படி நிக்தி விருதியில் ஒரு அணு உலையை அமைக்கத் திட்ட மிட்டார்கள். ஆனால் இந்த அணு உலைக்கு அம்மாநில மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அம்மாநில முதல்வர் விஜய் ரூபானி, மே மாதம் சட்ட மன்றத்தில் ‘புகுஷிமாவிற்கு பிறகு அணு உலை அமைக்க மக்கள் பெரும் எதிர்ப்பு தெரிவிப்பதால் இப்போது மட்டுமல்ல, இனி எப்போதுமே நாங்கள் அணு உலைக்க மாட்டோம்’ என்றார். ஆனால் கூடங்குளத்தில் எதிர்ப்பு தெரிவித்தால் 1, 2 என 6 யூனிட்டுகள் வரை அமைப்போம் என்று மக்களைக் கண்டுகொள்ளாமல் செயல்படுகின்றனர்.

நெடுவாசலிலிருந்து ஜெம் லேபரட்டீஸ் நிறுவனத்தை வெளியேற்றி இருக்கிறோம். ஆனால் அவன் நாளை வேறு பெயரில் வருவான். ஸ்டெர்லைட்டை இப்போது மூட வைத்திருக் கிறோம். நீதிமன்றத்தில் அனுமதி பெற்று மீண்டும் ஆலையைத் திறப்பான்; விரிவுபடுத்து வான். தமிழகத்துக்கு மட்டும்தான் இதுபோன்ற முடிவுகள் எல்லாம் திணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டை ஒரு உற்பத்தி கேந்திரமாக மாற்றுவதற்குத்தான் உலக நாடுகளும் விரும்புகின்றன. பாதுகாப்பு கேந்திரங்கள் எங்கெல்லாம் இருக்கிறது என்று இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்திய அரசு அறிவித்தது. அதில்

ஓசூர், கோயம்புத்துர், திருச்சி, ஆவடி, காட்டுப்பள்ளி, கல்பாக்கம் ஆகிய 6 இடங்கள் தமிழ்நாட்டில் இடம்பெற்றது. இதில் கல்பாக்கம் எங்கிருந்து வந்தது? இதற்கும் பாதுகாப்புத் துறைக்கும் என்ன தொடர்பு? கல்பாக்கத்தில் இருப்பது மின்சாரம் தயாரிக்கும் ஈனுலை மட்டும்தானே? அப்படியானால் இந்தியா வைத்திருக்கிற 110 அணு குண்டுகளில் இங்கிருந்தும் அணுக்கழிவை எடுத்து குண்டு தயாரித்திருக்கிறார்கள் என்று நமக்கு இதன்மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

அமெரிக்காவைப் போன்று இந்தியாவும் ஒரு வல்லாதிக்க அரசுதான். வேலை உருவாக்கம் என்றுகூறி நம்மை ஏமாற்றி தமிழகத்தின் வளங்களை சுரண்டுவதற்கு மற்றொரு காரணம், சீனாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் அதிகத் தொலைவில் தமிழகம் இருப்பது. சீனாவின் ஏவுகணை இலக்குக்கு அப்பால் தமிழகம் இருப்பதாக இந்தியா கருதுகிறது. ஆனால் இங்கிருந்து மிக அருகில் இருக்கிற இலங்கையின் ஹம்பந்தோட்டா துறைமுகத்துக்கு சீனா வந்துவிட்டது என்பது இவர்களுக்குப் புரியவில்லை.

**அணு உலையைக் கூட 50 வருடத்தில் மூடிவிடலாம். ஆனால் அணுக் கழிவுகளை குறைந்தது 1 இலட்சம் வருடங்களுக்குப் பாதுகாக்க வேண்டும்.**

உலகின் எந்த நாட்டிலும் அணுக் கழிவுகளை கையாள்வதற்கானத் தொழில் நுட்பமே கிடையாது. இதற்காக ஆழ்நிலைக் கருவூலம் ஒன்றை அமைக்க உலக நாடுகள் முயன்று வருகிறது. அதாவது பூமிக்குள் 2.50 கிலோ மீட்டருக்கு போய் அணுக் கழிவுகளை பாதுகாப்பதற்கான ஒரு கட்டடத்தை அமைப்பது.

இந்த முயற்சி இப்போது ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஐரோப்பாவில் உள்ள மொத்த அணுக் கழிவுகளையும் இங்கே கொட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். 1 இலட்சம் வருடத்திற்குப் பிறகு பூமியில் மனிதன் இருப்பானா எனத் தெரியாது. எனவே அப்போது இருக்கப்போகிற உயிரினங்களுக்குப் புரியும் வகையில் அபாயம் என்ற சொல்லைக் குறிக்கிற அடையாளத்தை உலகில் உள்ள எல்லா மொழியிலும் இந்தக் கட்டடத்தின் மேல் ஒட்டி வைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். எனவே கூடங்குளத்தில் வெளியாகவுள்ள இவ்வளவு ஆபத்தான அணுக் கழிவுகளை என்ன செய்யவுள்ளீர்கள் என்ற கேள்வியை முன்வைத்தோம். அதற்கு உச்ச நீதிமன்றத்தில் பதிலளித்த அரசு தலைமை வழக்குரைஞர் கோலார் சுரங்கத்தில் கொட்டவுள்ளோம் என்று தெரிவித்தார்.

கோலார் பகுதி மக்கள் இதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். இங்கு அணு உலையை ஆதரித்த பாஜக உள்ளிட்ட கட்சிகள் எல்லாம் கோலாரில் அணுக் கழிவுகளை கொட்ட விடமாட்டோம் என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இரண்டே நாளில் அதே தலைமை வழக்குரைஞர் கோலாரில் மட்டுமல்ல கர்நாடகாவில் எங்குமே அணுக் கழிவுகளை வைக்க மாட்டோம். கூடங்குளத்தில் உற்பத்தி யாகும் அணுக் கழிவுகள் கூடங்குளத்திலேயே வைக்கப்படும் என்றார். அணுக் கழிவு மேலாண்மைத் திட்டத்துக்கான தொழில் நுட்பத்தை 5 ஆண்டுகளுக்குள் அமைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தி யது. இது நடந்தது 2013ஆம் ஆண்டில்.

இப்போது 5 ஆண்டுகள் முடிந்துவிட்டது. இந்நிலையில் தேசிய அணுமின் கழகம் மீண்டும் உச்ச நீதிமன்றத்துக்கு வந்துள்ளது. 'எங்களிடம் அணுக் கழிவுகளை கையாளும் தொழில்நுட்பம் இல்லை. இதற்கு முன்பு நாங்கள் அணுக் கழிவுகளை கையாண்டதில்லை. இது ஒரு சவால் நிறைந்த பணியாக இருக்கிறது. எனவே எங்களுக்கு மேலும் 5 ஆண்டுகள் காலம் வேண்டும்' என்று தேசிய அணுமின் கழகம் கேட்டிருக்கிறது. அணுக் கழிவுகள் எந்த அளவுக்குப் பாதிப்பை உண்டாக்கும் என்பதை புகுஷிமா சென்று நேரில் பார்த்திருக்கிறேன்.

ஏபி 1000 என்னும் அணு உலை உலகில் எங்கேயும் கிடையாது, ஆனால் இந்தியாவுக்கு வரப்போகிறது. வரப்போகிறதோ இல்லையோ ஆனால் தொழில்நுட்பத்தில் கையெழுத்திட் டுள்ளனர். இபிஆர் என்னும் பிரான்சு நிறுவனத்தின் அணு உலை, அந்நாட்டில் கூட கிடையாது, இந்தியாவுக்கு வரப்போகிறது.

உலகில் சோதனை செய்யப்படாத தொழில் நுட்பங்களின் சோதனைச் சாலையாக இந்தியாவை மாற்றிக் கொண்டுள்ளனர்.

நாம் மின்சாரத்திற்கு எதிரானவர்கள் கிடையாது. மின்சாரம் இல்லையெனில் நான் எப்படி இப்போது மைக்கில் பேச முடியும். மின்சாரம் வேண்டாம் என்றோ அல்லது வளர்ச்சி வேண்டாம் என்றோ நாங்கள் கூறவில்லை. எது வளர்ச்சி என்ற கேள்வியை நாங்கள் முக்கியமாக முன்வைக்கிறோம். நாம் அமெரிக்காவிற்கெல்லாம் செல்ல வேண்டாம், சென்னை வேளச்சேரியில் ஆசியாவிலேயே மிகப்பெரிய மாலான பீனிக்ஸ் மால் உள்ளது. அங்கு ஒரு மணி நேரத்திற்கு 12,000 யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. அந்த மாலிலிருந்து 25 கி.மீ தள்ளியிருக்கக் கூடிய திருக்கழுக்குன்றம் கிராமத்தில் ஒரு நாளுக்கு 1000 யூனிட் மின்சாரம் செல்கிறது. ஒரு கிராமத்திற்கு 12 நாட்களுக்குத் தேவையான மின்சாரத்தை அந்த மால் ஒரு மணி நேரத்தில் பயன்படுத்து கிறது. இது எப்படி சரியானதாக இருக்க முடியும். இதைத்தான் நாங்கள் கேள்வி கேட்கிறோம்.

உலகமயமாக்கம் என்ன செய்துவிட்டது என்றால் மால், பாஸ்ட் ஃபுட் கலாச்சாரத்தை இறக்குமதி செய்துள்ளது. நாம் வெறும் தொழில்நுட்பத்தை மட்டும் இறக்குமதி செய்யவில்லை. நம்முடைய பழக்கவழக்கங்கள், உணவு முறை ஆகியவற்றையும் இறக்குமதி செய்வதுபோல ஆகிவிட்டது. அமெரிக்கா விலேயே அந்த உணவுகளுக்கு தரமே கடின (குப்பை உணவுகள்) என்று பெயர் வைத்து தூக்கிப் போடுகின்றனர். ஆனால் நம் குழந்தை களுக்கு பீட்சாவும், நூடுல்சும், ஹாம்பர்கும்தான் காலை உணவாக மாறியுள்ளது. நாம் தொழில் நுட்பத்தை மட்டும் கொண்டுவரவில்லை, நம்மை நுகர்வுத் தன்மை கொண்ட சமூகமாக இந்த உலகமயமாக்கம் மாற்றி விட்டது.

மின்சாரம் நமக்காகத் தயாரிக்கப்படு கிறதா என்றால் அதுவும் இல்லை. 1991ஆம் ஆண்டு இந்தியாவின் மின்சார உற்பத்தித் திறன் 89ஆயிரம் மெகா வாட்டாக இருந்தது. அப்போது இந்தியாவின் 40 விழுக்காடு மக்களுக்கு மின்சாரம் கிடைக்காமல் இருந்தது. இன்று இந்தியாவின் மின் உற்பத்தித் திறன் 3.15 லட்சம் மெகா வாட். கிட்டத்தட்ட 4 மடங்கு கூடியுள்ளது. ஆனால் இன்றும் இந்தியாவில் 30 கோடி மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. அப்படியென்றால் மின்சாரம் எங்கே சென்றிருக் கிறது, ஃபோர்டு, ஹுண்டாய், பெப்சி, கோக கோலா உள்ளிட்ட அனைத்துப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஐபிஎல் போட்டிகளுக்கும் சென்றுள்ளது. ஆனால் இன்றைக்கும் நம்முடைய விவசாயிகளுக்கு சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை. தமிழகத்தின் மின்சார உற்பத்தித் திறன் 15 ஆயிரம் மெகா வாட். கூடங்குளம் போராட்டம் நடந்தபோது அரசுக்கு ஒரு அறிக்கையே தயாரித்துக் கொடுத்தோம். அதில், 'கூடங்குளத்தில் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப் போகிறோம் என்று கூறுகிறீர்கள், ஆனால் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் கிடைக்காது' என்று குறிப்பிட் டிருந்தோம். அது தற்போது நிரூபணமாகி யுள்ளது.

40 விழுக்காடு இயக்கு திறனில்தான் இயங்கும் என்று கூறியுள்ளனர். அப்படி யென்றால் 400 மெகா வாட் மின்சாரம் மட்டுமே தயாரிக்க முடியும். 400இல் 200 மெகா வாட் மின்சாரம் மட்டுமே தமிழகத்துக்கு வரும். அதிலும் மின்சாரத்தைக் கொண்டு சேர்க்கும் வரை 20 விழுக்காடு வரை இழப்பாகிவிடும் என்பதால் 150 மெகா வாட் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. இதற்காகத்தான் இவ்வளவு பெரிய ஆபத்தான முயற்சி எடுத்து அணு உலைகளை அரசுகள் கொண்டுவருகின்றன. கூடங்குளம் அணு மின் நிலையத்தைவிட கல்பாக்கம் இன்னொரு பெரிய பிரச்சினை. உலகில் எங்கும் ஓடாத அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளால் கையாள முடியாது என்று மூடப்பட்ட அதிவேக ஈணுலைகளை கல்பாக்கத்தில் பொருத்தி யுள்ளனர். ஒன்றல்ல மூன்றைப் பொருத்தி யுள்ளனர். நான் இங்கு வைக்க வேண்டிய கேள்வி யாருக்காக இதை செய்கின்றீர்கள் என்பது தான்.

இன்று தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினையைக் கூற முடியும். கன்னியாகுமரியில் துறைமுகம்,

தாதுமணல் பிரச்சினை, திருநெல்வேலியில் கூடங்குளம் பிரச்சினை, தூத்துக்குடியில் ஸ்டெர்லைட், விவி மினரல்ஸ், தாரங்கதாரா கெமிக்கல்ஸ், ஸ்பிக், டேக் உள்ளிட்ட பிரச்சினைகள், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு மீத்தேன் பிரச்சினை, மதுரைக்கு காமராஜர் பல்கலைக் கழகம் எதிரேயுள்ள அணுக்கழிவு ஆய்வு மையம், தேனிக்கு நியூட்ரினோ, மேற்கு மண்டலத்திலுள்ள 7 மாவட்டங்களுக்கு கெயில் குழாய் பிரச்சினை, சேலத்தில் கஞ்சமலை பிரச்சினை, திண்டுக்கல்லுக்கு கொடைக்கானல் பாதரச தொழிற்சாலை பிரச்சினை, வேலூருக்கு ஆம்பூர் வாணியம்பாடியில் இருக்கக் கூடிய தோல் தொழிற்சாலைகள் பிரச்சினை, திருவண்ணாமலைக்கு எட்டுவழிச் சாலை, கவுத்தி மலைப் பிரச்சினை, கடலூர் வாழும் போபால் என்றே சொல்லலாம், அங்குள்ள மாசுகளால் மக்கள் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு மீத்தேன், ஹைட்ரோ கார்பன் பிரச்சினை, இதனைத் தவிர டெல்டாவில் 12 அனல் மின் நிலையங்கள் அமைக்கப் போகிறார்கள், காஞ்சிபுரம் சென்றால் கல்பாக்கம் அணுமின் நிலைய பிரச்சினை, திருவள்ளூர் மாவட்டத்திற்கு சென்றால் வட சென்னையிலுள்ள ரசாயனத் தொழிற்சாலைகள், அனல் மின் நிலையப் பிரச்சினை, இதைத் தவிர 34 நதிகளில் மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளைகள் நடைபெறுகிறது. அரியலூர், பெரம்பலூருக்கு சிமெண்ட் தொழிற்சாலை பிரச்சினை. இப்படி பிரச்சினை இல்லா மாவட்டம் என்று எதைச் சொல்ல முடியும் நம்மால். இதில் நடைபெறக் கூடிய விஷயங்களில் கிட்டத்தட்ட 50-60 விழுக்காடு ஏற்றுமதி சம்பந்தப்பட்டதுதான். உள்ளாடை, தோல் பொருட்கள், கார் உள்ளிட்டவை ஏற்றுமதியாகின்றது. அப்படி யென்றால் நமக்குரிய வளத்தை நமக்குக் கொடுக்காமல் மாசுபடுத்திவிட்டு, அதிலிருந்து வரக்கூடிய பொருட்களைக் கூட பன்னாட்டு நிறுவனங்கள் அவர்களுடைய நாடுகளுக்கு இறக்குமதி செய்து கொள்கின்றன நதிகளை இணைக்க வேண்டும் என்று இப்போது பேசுகிறார்கள்.

சூழலியல் பார்வையில் கூறுகிறேன், நதிகளை இணைக்க அது ஒன்றும் பைப் கிடையாது. அதற்கென்று சில சூழலியல் சேவைகள் உள்ளன. நதி என்பது கடலில் சென்று கலக்க வேண்டும். அப்போதுதான் கடலில் இருக்கக்கூடிய உப்புத் தன்மை சீராகி, அதிலிருந்து ஆவியாகி, மேகமாகி நமக்கு மழை பெய்யும். உப்புத் தன்மை மாறியதென்றால் மழை பொழிவில் சிக்கல் வந்துவிடும். நன்னீர் கடலில் கலக்கின்ற பகுதிகளை நாம் கழிமுகங்கள் என்று கூறுகின்றோம். இவைதான் மீன் வளத்திற்காக முக்கியமான ஆதாரம். மழை பெய்வதனால் நமக்குத் தண்ணீர் கிடைக்கிறது, நாம் சுவாசிக்கக் கூடிய ஆக்சிஜனை யார் தயாரிப்பது தெரியுமா கடல் பாசி. நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனை 75 விழுக்காடு தயாரிப்பது கடல். கடலென்றால் உள்ளே யாரும் தொழிற்சாலை வைத்திருக்க வில்லை. அங்குள்ள கண்ணுக்கு புலப்படாத சின்னச் சின்ன உயிரினங்கள்தான் தங்களுடைய உணவு தயாரிப்பின் மூலம் ஆக்சிஜனை வெளியிடுகின்றன.

ஆற்றிலிருந்து செல்லக்கூடிய நன்னீர் கொண்டு சேர்க்கும் கனிமங்கள்தான் சின்ன உயிரிகளுக்கு உணவு. சின்ன உயிரினங்கள்தான் சின்ன மீன்களுக்கு சாப்பாடு, சின்ன மீன்கள் தான் பெரிய மீன்களுக்கு சாப்பாடு, பெரிய மீன்கள்தான் நமக்கு சாப்பாடு. அப்போது நதி கடலில் கலப்பது என்பது தேவையான விஷயம். இதையெல்லாம் மறைத்துவிட்டு நதிநீர் இணைப்புக்கான 20 இலட்சம் கோடிக்கான ஒப்பந்தத்தை அதானியுடைய கட்டுமான நிறுவனத்திற்கு தரப் போவதாக சொல் கிறார்கள். ஆனால் தமிழகத்திற்கு ஒருபோதும் தண்ணீர் கொண்டுவர மாட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்பது எங்களுக்குப் பிரதான மானது. சுற்றுச் சூழலை பாதுகாத்து, தண்ணீரைக் குடித்தால்தான் வேறு எதனை செய்வதற்கான தேவையும் இங்கு இருக்கும்.

**(ஜூன் 24, 2018 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய ஏற்காடு பயிற்சி முகாமில் நிகழ்த்திய உரையின் சுருக்கம். கட்டுரையாளர் சுற்றுச் சூழல் போராளி)**

தொகுப்பு : ர. பிரகாஷ்

# தண்டனைக் குறைப்புக்கு, செய்த குற்றங்களைப் பார்க்கக் கூடாது

• தியாகு •

***நீதிமன்றத்தில் விசாரிக்கும் போது சாட்சி, ஆதாரம் உள்ளிட்ட குற்றத்தைப் பற்றி மட்டும்தான் பார்க்க வேண்டும்; குற்றத்திற்கான தண்டனையை முடிவு செய்யும் போது குற்றத்தையும், குற்றவாளியையும் (வயது, முதல் குற்றமா? எந்த சூழலில் குற்றம் நடந்தது போன்ற காரணிகள்) பார்க்க வேண்டும்; முன்விடுதலை செய்யும் போது குற்றவாளியை மட்டுமே பார்க்க வேண்டும்; செய்த குற்றத்தைப் பார்க்கக் கூடாது என்பவை எல்லாம் உலகம் முழுவதும் ஒத்துக் கொள்ளப் பட்ட நடைமுறைகள்.***

*தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, தன் வாழ்நாளில் 15 ஆண்டுகள் சிறையில் கழித்தவர் தியாகு. சிறைப்பட்டோரின் உரிமை, சிறைகளின் நிலைமை, அரசு எந்திரங்களின் மனோபாவம் பற்றி தியாகு பேசுகிறார். எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நீண்டகால சிறை வாசிகளை விடுதலை செய்வதில் பாகுபாடு காட்டக் கூடாது என்ற கோரிக்கை எழுப்பப் படும் நேரத்தில் இந்த நேர்காணல் முக்கியத்துவம் பெறுகிறது.*

***கேள்வி: எந்த மாநிலத்தில் சிறைச் சாலை சீர்திருத்தங்கள் சிறப்பாக இருக்கின்றன என்று கருதுகிறீர்கள்?***

***பதில்:*** கேரளா இதற்குக் காரணம் ஆட்சியாளர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதால் அல்ல. மேற்கு வங்காளச் சிறைகள் தமிழ்நாட்டை விட மோசமாக இருக்கும். "போல்ஷ்விக்குகள் அதிகாரத்திற்கு வந்ததால் உருசியாவில் சிறைகள் நன்றாக இருந்தன. அதற்குக் காரணம் அவர்கள் போல்ஷ்விக்குகள் என்பதால் அல்ல; மாறாக அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் என்பதால்" என்று பகத் சிங் எழுதியுள்ளார். கேரளாவில் இஎம்எஸ், ஏ.கே.கோபாலன் போன்றோர் சிறையில் இருந்தனர். வி.ஆர். கிருஷ்ணய்யர் வழக்கறிஞராக, சட்டமன்ற உறுப்பினராக, சிறைத்துறை அமைச்சராக, நீதிபதியாக பல அனுபவங்களைப் பெற்றவர். எனவே கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி செய்தாலும், கம்யூனிஸ்டு ஆட்சி செய்தாலும் சிறைகள் நன்கு பராமரிக்கப்பட்டு இருக்கும். கேரளாவில் கைதிகளின் உழைப்பிற்கு தரும் ஊக்க ஊதியத்தை (incentive) அதிகப்படுத்தினார்கள். அதை வைத்து டோக்கன் கொடுத்து சிறை கேண்டீனில் வடை, தேநீர் போன்றவை கைதிகள் வாங்கிச் சாப்பிட முடியும். வெளியே போகும் போது பணமும் கிடைக்கும். அதே போல கேரளாவில்தான் வேலைக்கு மட்டும் சீருடை, அறையில் இருக்கும் போது வேட்டி அணிந்து கொள்ளலாம் என்று மாற்றம் கொண்டு வந்தார்கள். சி.ஏ.பாலன் எழுதிய தூக்குமர நிழலில் நூலைப் படித்தால் அப்போதைய சிறை எப்படி இருந்தது என்று புரிந்து கொள்ள முடியும். மொழிப்

போராட்டம், கல்லக்குடி போராட்டம், விலைவாசிப் போராட்டம் என்று திமுக பெற்ற சிறை அனுபவத்தால் இயல்பாகவே தமிழ் நாட்டில் திமுக ஆட்சியில் சிறைத்துறை சீர்திருத்தங்கள் ஓரளவு சிறப்பாக நடைபெற்றன. 1967இல் திமுக ஆட்சி, கைதிகள் குல்லாய் அணியத் தேவை இல்லை என்று அறிவித் தார்கள். வாரம் ஒரு முறை கடிதம் எழுதலாம், 15 நாட்களுக்கு ஒருமுறை நேர்காணல் பார்க்கலாம் என்ற வசதிகள் திமுக ஆட்சிக் காலத்தில் மேம்பாடு அடைந்தன. 1974 நாங்கள் நடத்திய சிறைப் போராட்டத்தின் தொடர்ச்சியாக 1977 எம்.ஜி.ஆர். ஆட்சியில் நீதிபதி நரசிம்மன் கமிசன் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரை அடிப் படையில்தான் புழல் சிறை கட்டப்பட்டது. நெருக்கடி நிலைக்கால சென்னை சிறைக் கொடுமைகள் பற்றிய இசுமாயில் கமிசன் அறிக்கையும் சிறைச் சீர்திருத்தங்களுக்குப் பரிந்துரைகள் செய்தது. என்னுடைய சுவருக்குள் சித்திரங்கள், கம்பிக்குள் வெளிச்சங்கள் நூல்களில் இவை பற்றி விரிவாகவே எழுதி யிருக்கிறேன். சிறைச்சாலைகளை எல்லா அரசுகளும் வைத்துள்ளன. முதலாளித்துவ அரசாக இருந்தாலும் சரி; கம்யூனிஸ்டு அரசாக இருந்தாலும் சரி. ஈழத்தில் தலைவர் பிரபாகரன் நடத்திய ஆட்சியாக இருந்தாலும் சரி. சிறைகளற்ற சமூகம் இதுவரை அமையவில்லை. சிறைச்சாலைகள் ஒரு மனிதனின் நுரையீரல் போல. நுரையீரல் சரியாக இருந்ததால்தான் மூளை, இதயம், கை, கால் போன்ற மற்ற உறுப்புகள் சரியாக இருக்கும்.

***கேள்வி: எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நீண்டகால சிறைவாசிகளை முன்விடுதலை செய்யப் போவதாக தமிழ் நாட்டின் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து உள்ளாரே?***

***பதில்:*** காந்தி நூற்றாண்டு விழா, அண்ணா நூற்றாண்டு விழா என்று ஏற்கெனவே கைதிகளை முன்விடுதலை செய்துள்ளனர். கைதிகளை முன் விடுதலை செய்வதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்துள்ளது. முன்னர் விடுதலை அறிவிப்பு வந்தால் குறிப்பிட்ட ஒரே நாளில் கைதிகளை விடுதலை செய்வார்கள். கைதிகள் குடும்பத்தின ரோடு மகிழ்ச்சியாகப் போய்க் கொண்டாடு வார்கள். ஆனால் முதலமைச்சர் அறிவிப்பு வந்து சில மாதங்கள் ஆன பின்னரும் இதுவரை சில நூறு கைதிகள் மட்டுமே விடுவிக்கப்பட் டுள்ளனர். அதுவும் பகுதி, பகுதியாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அரசு விதித்த நிபந்தனைகளின் படியே விடுதலைக்கு தகுதியான 1500 பேர் இன்னமும் விடுவிக்கப்பட வில்லை. இதில் பாகுபாடு காட்டக்கூடாது. மத மோதல் வழக்கு (communal cases) வழக்கு என்ற காரணத்தைக் காட்டி பல இசுலாமிய சிறைப்பட்டோர் விடுவிக்கப்படவில்லை. அவர்களில் ஒரு சிலர் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலேயே உள்ளனர். இப்படி முன்விடுதலை செய்யும் போது செய்த குற்றத்தைப் பார்க்கக் கூடாது; குற்றவாளியை மட்டும்தான் பார்க்க வேண்டும்.

நீதிமன்றத்தில் விசாரிக்கும் போது சாட்சி, ஆதாரம் உள்ளிட்ட குற்றத்தைப் பற்றி மட்டும்தான் பார்க்க வேண்டும்; குற்றத்திற்கான தண்டனையை முடிவு செய்யும் போது குற்றத்தையும், குற்றவாளியையும் (வயது, முதல் குற்றமா? எந்த சூழலில் குற்றம் நடந்தது போன்ற காரணிகள்) பார்க்க வேண்டும்; முன்விடுதலை செய்யும் போது குற்றவாளியை மட்டுமே பார்க்க வேண்டும்; செய்த குற்றத்தைப் பார்க்கக் கூடாது என்பவை எல்லாம் உலகம் முழுவதும் ஒத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைகள்.

முன்னாள் பிரதமரைக் கொன்றவர்களை விடுதலை செய்யக் கூடாது போன்ற வாதங்கள் சரியல்ல. எத்தனை ஆண்டு கழிந்தாலும் அவர் முன்னாள் பிரதமராகத்தான் இருப்பார். குற்றத் தீர்ப்பு பெற்று தண்டனையும் விதிக்கப்பட்டு பல்லாண்டு காலம் சிறையில் கழித்த ஒருவரை விடுதலை செய்ய வேண்டிய நேரத்தில் குற்றத்தைச் சொல்லி விடுதலை மறுப்பது தண்டனையின் நோக்கத்தையே அபத்தமாக்கி விடும்.

குற்றத்திற்கு தண்டனை வழங்குவதற்கு நான்கு நோக்கங்கள் சொல்வார்கள்: ஆங்கிலத் தில் நான்கு R சொல்வார்கள்: Revenge, Retribution,

Reformation, Rehabilitation! அதாவது Revenge – பழிக்குப் பழி; Retribution – வஞ்சம் தீர்த்தல்; Reformation – சீர்திருத்தம்; Rehabilitation – மறுவாழ்வு. வரலாற்று வழியில் இந்த நோக்கங்களின் முக்கியத்துவம் மாறியுள்ளது. சீர்திருத்தத்துக்கும் மறுவாழ்வுக்கும் முக்கியத்துவம் தர வேண்டிய இக்காலத்தில் அரசே வஞ்சம் தீர்க்கும் உணர்ச்சியை வளர்ப்பதை ஏற்க முடியாது. சிறை என்பது சீர்திருத்தக் கூடமாக இருக்க வேண்டும். எவரையும் நிரந்தரமாகச் சிறையிலடைத்து வைத்து சீர்திருத்தம் செய்ய முடியாது. எந்த ஒருவரையும் கால் நூற்றாண்டு காலம் சிறையில் வைத்துக் கொண்டு விடுதலை செய்ய மறுப்பது சீர்திருத்தக் குற்றவியல் நெறிகளுக்கு முரணானது.

---

**காவல்துறைக்கும் முன்விடுதலைக்கும் என்ன தொடர்பு? இதை யாரும் கேள்வி கேட்பதில்லை. இங்கு நடப்பது மக்களாட்சியா? காவல் துறை ஆட்சியா?**

---

***கேள்வி:*** *ராஜீவ் காந்தி கொலையாளிகளை விடுதலை செய்ய மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களே?*

***பதில்:*** மன்னிப்பு, தண்டனை நீக்கம், தண்டனைக் கழிவு, தண்டனைக் குறைப்பு என்பதெல்லாம் சட்டத்தில் இருப்பவைதான். ஒரு கைதியைப் பற்றி, அவர் குடும்பச் சூழல் பற்றி சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திற்கே தெரியும். சட்டம் ஒழுங்கும், சிறைகளும் மாநில அதிகாரப் பட்டியலில் உள்ளன. இந்த அதிகாரங்களில் மாநில அரசு இறைமை (sovereign) கொண்டது. அரசமைப்புச் சட்டம் உறுப்பு 161 ன் கீழ் ஒரு கைதியை முன்விடுதலை செய்யும் முழு அதிகாரமும் மாநில அரசுக்கு உண்டு. இப்படித்தான் வி.ஆர். கிருஷ்ணய்யர் மத்திய அரசை எதிர்த்து சி.ஏ. பாலன் தூக்குத் தண்டனைக் குறைப்பில் நிலை எடுத்து வெற்றி பெற்றார். நமக்கு ஏன் வம்பு என்ற மனநிலையில் யாரும் முடிவு எடுக்கத் தயங்குகிறார்கள்; நீதிமன்றம் உட்பட!

நான் 15 ஆண்டுகள் சிறையில் இருந்து இருக்கிறேன். எனக்குத் தெரிந்து சாகும் நிலையில் உள்ள பல கைதிகளை சிறைக் கண்காணிப்பாளரே மாநில அரசுக்குத் தெரியப்படுத்தி விட்டு, அரசின் இசைவை எதிர்பார்த்து, விடுதலை செய்து இருக்கிறார். இறக்கும்போது ஒருவர் தன் வீட்டில் இறக்க வேண்டும் என்ற கருத்துப்படி (pleasure of dying at home) இதைச் செய்தார்கள். இப்போது அபு தாகீர் என்பவர் தீரா நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது இரண்டு கண்களும் பார்வை இழந்து விட்டன. அவரை விடுதலை செய்ய மாநில அரசு தயாராக இல்லை. நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டுள்ளது. அமைச்சருக்கு, அரசுச் செயலாளர்களுக்கே தங்கள் அதிகாரம் என்னவென்று தெரியவில்லை. முன்விடுதலை பற்றிய கோரிக்கை வந்தால் அதைக் காவல்துறைக்கு அனுப்புகிறார்கள். காவல்துறைக்கும் முன்விடுதலைக்கும் என்ன தொடர்பு? இதை யாரும் கேள்வி கேட்பதில்லை. இங்கு நடப்பது மக்களாட்சியா? காவல் துறை ஆட்சியா? அரசாங்கம் பத்தாண்டுகள் சிறையில் இருந்தவர்களை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்வதுதான் மனிதத் தன்மையுள்ள செயலாக இருக்கும். அதுவே நாகரிக சமுதாயத்திற்கான பண்பாக இருக்கும்.

***கேள்வி:*** *நீங்கள் சிறைத்துறை அமைச்சராக இருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுப்பீர்கள்?*

***பதில்:*** கியூபா, தென்னாப்பிரிக்கா நாடுகளில் உள்ள சிறைகள் நன்றாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அமெரிக்காவில் சிறைகள் மோசமாக உள்ளன. பிரான்சு நாட்டுத் தண்டனை முறையின் கொடுமையைப் பட்டாம்பூச்சி புத்தகத்திலிருந்து அறியலாம்.

நேற்றைய பாவி இன்றைய புனிதராகலாம்; இன்றைய பாவி நாளை புனிதராகக் கூடாதா

என்ன? சிறைத் துறையை மேம்படுத்துவதில் அரசின் அங்கங்களான சட்டமியற்றும் பேரவைகள், நீதிமன்றங்கள், அரசு எந்திரம் என்ற அனைத்திற்கும் பங்கு உண்டு. நான்காவது கொற்றம் (Fourth estate) என்று அழைக்கப் படுகிற ஊடகங்களுக்கும் இதில் பொறுப்பு உண்டு.

அமெரிக்காவில் சிறைப்பட்டவர்களை அரசின் அடிமைகள் (Slaves of States) என்று சொல்லும் காலம் ஒன்று இருந்தது. பிறகு நாகரிகம் வளர்ந்து "சிறைக்குரிய கட்டெல்லைக்கு உட்பட்டு குடிமகனுக்குரிய எல்லா உரிமைகளும் சிறைப்பட்டோருக்கு உண்டு" என்ற கருத்து அங்கும் இங்கும் வளர்ந்துள்ளது.

சிறைப்பட்டோருக்கு வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள எந்த தடையும் இருக்கக் கூடாது. நீதிமன்றம், அரசு, மனித உரிமை ஆணையம், ஊடகம் போன்றவற்றோடு தடையற்ற தொடர்பு கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் இருக்க வேண்டும். ஒரு சில வரையறைகளோடு, இணையதள வசதிகள் கூட ஏற்படுத்தலாம். இப்படிச் செய்தால் சிறைக் கைதிகள் மீது நடைபெறும் அடக்குமுறைகள் குறையும். கிருஷ்ணய்யர் சொல்லும் Sight Proof, Sound Proof prisons என்ற நிலை மாற வேண்டும். நாங்கள் திருச்சி சிறையில் இருந்த போது எங்களைப் பார்க்க வந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.கல்யாண சுந்தரத்தைக் கூட பார்க்க அனுமதி மறுத்து விட்டார்கள். சிறைக் கண்காணிப்பாளர் தன்னை king of kings (அரசருக்கு அரசர்) என்றுதான் சொல்லிக் கொள்வார். நெருக்கடி கால கட்டத்தின் போது ஸ்டாலின், சிட்டிபாபு, ஆற்காடு வீராசாமி போன்ற திமுக தலைவர்களே இழிவுக்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டார்கள் என்றால் சாதாரணக் கைதிகளுக்கு யார் பாதுகாப்பு? கோவைச் சிறையில் சினிமா அரங்கு போன்றவற்றைக் கட்டிக் கொடுத்த ஒரு கண்காணிப்பாளரே பின்பு பாம்புத் தோல் கடத்திய வழக்கில் சிறைக்கு வந்தார். நாளை யார் வேண்டு மானாலும் சிறைக்கு வர நேரிடும் என்பது அனைவருக்கும் நினைவிருக்க வேண்டும்..

***கேள்வி: கிரண் பேடி போன்ற அதிகாரிகள் சிறையில் நல்ல பணி ஆற்றி யிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே?***

***பதில்:*** இருக்கலாம். என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் மேலிருந்து வரும் சீர்திருத்தம் பெரிய மாற்றம் கொண்டுவராது. இங்கு கூட நடராசன் என்ற அதிகாரி பற்றி பெருமையாகச் சொன்னார்கள். நான் சொன்னேன் அவரை ஒரே ஒரு மாற்றத்தைச் செய்யச் சொல்லுங்கள் என்றேன். அதாவது நேர்காணலின் போது கைதிகளைச் சந்திக்க வரும் உறவினர்கள் கும்பல், கும்பலாக இரும்புத் தடுப்பிற்கு வெளியே இருப்பார்கள். இதை மாற்றி கண்ணாடித் தடுப்பு வைப்பாரா? புல்லட் புரூப் கண்ணாடி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும் அவர்களும் இவர்களும் அமைதியாகப் பார்த்துப் பேசிக்

**1974ஆம் ஆண்டு தோழர் ஏ.ஜி. கஸ்தூரிரெங்கன் தலைமையில் சிறைப்படுத்தப்பட்டோர் நலவுரிமைச் சங்கம் என்ற ஒன்றை அமைத்து பத்து நாட்கள் உண்ணாவிரதம் இருந்து போராடினோம்.**

கொள்ள வழி செய்யுங்கள் என்றேன். உறவினர்களும் கைதிகளும் தூதரகங்களில் இருப்பது போல மைக், கேட்கும் கருவி மூலம் தடையறப் பேசலாமே! செலவும் அதிகம் ஆகாதே! கைதிகளின் கண்ணியம் பற்றியெல்லாம் அக்கறை இல்லை என்றால் நல்லது எப்படி நடக்கும்?

***கேள்வி: நீதிமன்றங்களுக்கு இதில் பொறுப்பு இல்லையா ?***

***பதில்:*** ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் பல நல்ல தீர்ப்புகளைத் தந்துள்ளது. கிருஷ்ணய்யர், சின்னப்ப ரெட்டி, சந்திரசூட், தேசாய், பகவதி போன்ற நீதிபதிகள் பல நல்ல தீர்ப்புகளை தந்துள்ளனர். இவை செயலாகின்றனவா என்று யார் பார்ப்பது? வாரம் ஒரு முறை மாவட்ட நீதிபதி சிறைச்சாலையைப் பார்வையிட

வேண்டும், புகார்ப் பெட்டி வைக்க வேண்டும், உயர் நீதிமன்றத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்பதெல்லாம் இருக்கின்றன. இந்தியா முழுக்க ஒரே ஒரு மாவட்ட நீதிபதி கூட இதைச் செய்வதில்லை. நடைமுறையில் நிலைமை படுமோசமாக உள்ளது. கைதிகளின் முன்விடுதலை பற்றி முடிவு செய்ய ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அறிவுரைக் கழகங்கள் (Advisory Board) கூடி முடிவெடுக்க வேண்டும். ஆனால் அது கூட்டப்படுவதே இல்லை. அதனால்தான் முக்கியத் தலைவர்கள் பிறந்த நாளின் போது விடுதலை செய்யப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாகத் தெரிகிறது. கடந்த காலங்களில் இந்த அறிவுரைக் கழகங்கள் வழமையாகச் செய்த பணிதான் இது. இதைப் பற்றி எந்த பத்திரிகையாவது கேள்வி எழுப்புகிறதா? இப்போது கூட தினமலர் நாளிதழ் இந்த முன்விடுதலை பற்றி எள்ளலாகத்தான் செய்தி வெளியிடுகிறதே ஒழிய, 18 ஆண்டுகள், 20 ஆண்டுகள் சிறையில் இருப்போரின் உளவியல் பற்றியெல்லாம் அதற்கு அக்கறை இல்லை.

கைதிகளுக்கு சங்கம் வைக்கும் உரிமை வேண்டும். சிறைச்சாலையில் வெளி உலகத்தின் பார்வை வேண்டும். (Social oversight of Prisons), அதனால்தான் மரங்களின் மீதும், கட்டடங்களின் மீதும் போராட்ட சமயங்களில் கைதிகள் ஏறிக் கொண்டு பொது மக்களுக்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறார்கள். தரையில் இருந்து முழங்கினால் சிறைக் கைதிகளின் மண்டையைப் பிளந்து விடுவார்கள். 1983இல் நாங்கள் திருச்சி சிறையில் இருந்த போது தேர்தல் நடத்தி எங்கள் பிரதிநிதிகள் மூலம் சிறை நிர்வாகத்தில் பங்கு எடுத்தோம். சிறை அதிகாரியை துரை என்று கூப்பிடுவதை நிறுத்தினோம் .போதைப் பழக்கம், சீட்டு விளையாட்டு குறைந்தது; குறள் வகுப்புகள் நடத்தினோம். உணவின் அளவு, தரம் இவற்றைப் பார்த்துக் கொண்டோம். கண்காணிப்பாளர் வீட்டு நாய்க்குக் கூட சிறையிலிருந்து சாப்பாட்டு தர மாட்டோம் என்று ஊழலை எதிர்த்து நின்றோம்.

1974ஆம் ஆண்டு தோழர் ஏ.ஜி. கஸ்தூரிரெங்கன் தலைமையில் சிறைப்படுத்தப் பட்டோர் நலவுரிமைச் சங்கம் என்ற ஒன்றை அமைத்து பத்து நாட்கள் உண்ணாவிரதம் இருந்து போராடினோம். போராட்டத்தால் கிடைத்த பலன் குறித்து ஏ.ஜி.கே. “அப்ப நீர்ல மோர் கலந்தாங்க; இப்ப மோர்ல நீர் கலக்குறாங்க” என்று சொல்வார்.” சிறைப் படுத்தப்பட்ட அனைவரும் ஒடுக்கப்பட்ட தோழர்கள் என்பார்.

***கேள்வி:* நீங்கள் நீதிபதியாக இருந்தால் எஸ்.வி.சேகருக்கு பிணை கொடுத் திருப்பீர்களா?**

***பதில்:*** கொடுத்திருப்பேன். எதிரியாக இருந்தாலும், குற்றவாளிக்குரிய உரிமைகளை மதிக்க வேண்டும். Bail is the rule, and jail is an exception (பிணை என்பது விதி; சிறை விதிவிலக்கு) என்பதுதான் கொள்கை, வழக்குகளை விரைவாக நடத்த வேண்டும். குற்றவாளியா இல்லையா என்பது விரைவில் முடிவு செய்யப்பட வேண்டும்.

***கேள்வி:* இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?**

***பதில்:*** வழக்கம் போல் இயக்கம், எழுத்து தவிர இப்போது சிறப்பாகச் செய்து கொண்டிருப்பதைச் சொல்கிறேன். சிறையிலிருந்த போது கார்ல் மார்க்சின் தாஸ் கேபிடல் மூன்று பாகங்களையும் தமிழில் மூலதனம் என்று மொழி பெயர்த்து அவை ஐந்து புத்தகங்களாக வெளிவந்தன. வெளிவந்து சில ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்போது அதன் முதல் பாகத்தையே மூலமுதல் என்ற பெயரில் தூய தமிழில் மீள் மொழியாக்கம் செய்து வருகிறேன். முன்வெளியீட்டுத் திட்டம் அறிவித்துள்ளோம். வருகிற சென்னை புத்தகக் கண்காட்சியின் போது வெளியிடலாம் எனக் கடுமையாக உழைத்து வருகிறோம். நீங்கள் வரும் போது கூட அந்த வேலைதான் செய்து கொண்டிருந்தேன்.

நன்றி : ‘தி டைம்ஸ்’ இணையத்துக்கு அளித்த பேட்டி

# தமிழ் இலக்கியங்களில் மூட நம்பிக்கைகள் (2)

- சு. அறிவுக்கரசு -

**அறிவியல் வளராத காலத்தில் உருவான தமிழ் இலக்கியங்களில் மூடநம்பிக்கைகள் இருந்தது என்பதை ஒப்புக் கொள்ளாமல் அதைப் பெருமைப்படுத்துவது என்ன நியாயம் என்ற கேள்வியை எழுப்புவதோடு உ.வே.சாமிநாதய்யரின் உரைகளில் திணிக்கப்பட்ட பார்ப்பனியத்தையும் சுட்டிக்காட்டுகிறது இந்தக் கட்டுரை.**





வானில் தோன்றும் நட்சத்திரங்கள், கிரகங்கள் போன்றவை மனிதகுல வாழ்வில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன எனும் நம்பிக்கை தமிழரிடையே நிறையவே உண்டு. தீய நிமித்தங்களுக்கும் வானில் ஏற்படும் நிலைகள் தாம் காரணிகள் என்று தமிழர் அஞ்சினர். இதனைக் கணித்துக் கூறும் ஆண்கள் கணியன் என்றழைக்கப்பட்டனர். அக்கலை அய்ந்திரம் எனப்பட்டது. அதுவே பஞ்சாங்கம் என இன்று அழைக்கப்படுகிறது. மேலை நாடுகளில் அது ALMANAC எனப்படுகிறது.

ஆனால், மேலை நாடுகளுக்கும் இந்திய நாட்டுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் மேலை நாட்டுப் பஞ்சாங்கம் ஒன்றே ஒன்று. இந்திய நாட்டில் பஞ்சாங்கங்கள் மொத்தம் எட்டு. தமிழ்நாட்டில் பஞ்சாங்கம் இரண்டு. சுத்த வாக்கியப் பஞ்சாங்கம், எண் கணிதப் பஞ்சாங்கம் என இரண்டு உள்ளன. அதிலும் தனித்து விளங்குபவர் தமிழர்.

மினுக் மினுக் என மின்னுபவை விண்மீன்கள் (நட்சத்திரங்கள்). மின்னாமல் ஒன்றுபோல் ஒளிர்வன கோள்கள் (கிரகங்கள்). இந்த வேறுபாடு பற்றிய அறிவு குறைவாக இருந்ததால் சூரியன் எனும் விண்மீன் கோள் எனக் கருதப்பட்டு ஜோசியம் கூறப்படுகிறது. ஜாதகம் கணிக்கப்படுகிறது. அதுபோலவே, விண்மீனும் அல்லாதுகோளும் அல்லாது துணைக்கோளாக இருக்கும் சந்திரன் கோள் என ஜோசியத்தில் வைக்கப்பட்டு கணக்கிடப்படுகிறது. இல்லாத கோள்களான இராகு, கேது எனப் பெயரிடப்பட்டு நிழல் கிரகங்கள் என்கிறது ஜோசியம். கோள் எனப்படும் இலக்கணம் கொண்ட பூமிக்கோள் ஜோசிய கிரகங்களில் இடம் பெறவில்லை. விண்ணில் இருக்கும் கோள்கள் தமிழ் ஜோசியக் கணக்கில் இடம் பெறவில்லை. இத்தனைக் கோளாறுகளைக் கொண்ட அய்ந்திரம் மனித வாழ்வைக் கணிக்கிறது என்பதை

அறிவுடையோர் ஏற்க முடியாது அல்லவா?

விடியலின்போது காணக் கிடைக்கும் விடிவெள்ளி தென்திசைப் பக்கம் தெரியு மானால், மழை பொய்க்கும், வறட்சி ஏற்படும் எனும் நம்பிக்கை தமிழரிடையே இருந்தது என்பதைப் புறநானூற்றுப் பாடல் 35 தெரிவிக்கிறது. வடக்கில் தெரிந்தால் மழை பெய்யும் எனப் பதிற்றுப்பத்து பாடுகிறது (பாடல் 13). வால் நட்சத்திரம் தோன்றினால் மன்னர் மடிவார், பஞ்சம் வரும் என்றெல்லாம் அஞ்சினர். தமிழர் என்பதைப் புறநானூறும் சிலப்பதிகாரமும் கூறுகின்றன. மாபெரும் மன்னர்கள் மடிந்தபோது அப்படி ஏதும் நிகழவில்லை என வரலாறு சுட்டும். திருச்சுழியி லிருந்து திருவண்ணாமலை வந்து மலையடியில் பண்டாரமாக வாழ்ந்த வெங்கட்ரமணன் எனும் பார்ப்பனர் ரமண மகரிஷி என்று ஆக்கப்பட்டு இறந்தபோது வால் நட்சத்திரம் தோன்றியதாகச் சிலர் கதை கட்டினர். அது புளுகு என்பது உடனே தெரிந்துவிட்டது. அந்த ஆள் மகரிஷி அல்லர் என்பதும் தெரிந்துவிட்டது - அவர் பண்டாரவேசம் போட்டுச் சேர்த்த சொத்துக்களைத் தன் தம்பி பெயருக்கு எழுதி வைத்தது பற்றி வழக்கு வந்தபோது, தாம் துறவு கொள்ளவில்லை என்றும் சன்னியாசி அல்லாத சம்சாரி என்றும் வழக்கு மன்றத்தில் வாக்குமூலம் தந்தபோது புளுகு வெளிப்பட்டது.

சூரியன் கிழக்கில்தான் தோன்றும். ஆனால், நான்கு திக்குகளிலும் தோன்றினால் எட்டுத் திக்குகளில் எரிகொள்ளி வீழ்ந்தால் இரவில் வானவில் தோன்றுதல், பகல் இருளு தலும் சூரியனை இருள் கவிதலும் தீ நிமித்தங்கள் எனப் புறநானூறும் சிலப்பதிகாரமும் கூறு கின்றன. வானில் ஏற்படும் இயற்கை மாற்றங்கள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றிய அறிவு இல்லாததாலும் அறியாமையினாலும் அச்சத் தினாலும் தமிழர்கள் பயங்கொண்டு இப்படிப்பட்ட நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டனர் என்றுதான் கருதவேண்டும்.

எரி நட்சத்திரம் பகலில் விழுவது தெரிந்தால் தீமை என்ற நம்பிக்கை. அதனை உற்கம் எனப் பெயரிட்டு அது நிகழ்ந்தால் விளை பயிர்களுக்குச் சேதம் என நம்பினர். அப்படி எரி நட்சத்திரம் விழுந்த ஏழாம் நாள் யானைச் சாவு,

**ஆண்டவனாலேயே அனைத்தும் ஆக்கப்பட்டன எனும் தத்துவமும் அனைத்தும் அதனால் ஆட்டுவிக்கப்படுகின்றன எனும் தத்துவமும் சரி என்றால், எல்லா நாள்களும் நல்ல நாளாகத்தானே இருக்க வேண்டும்?**

முரசு கிழிதல், வெண்கொற்றக் குடைக் காம்பு கழன்று விழுதல், குதிரைகள் முடங்கிக் கிடத்தல் போன்ற தீச்செயல் நிமித்தங்கள் ஏற்பட்டு இறுதியில் மன்னன் இறந்தான் என்று கூடலூர் கிழார் எனும் புலவர் எழுதிய பாடல் புற நானூற்றில் 229ஆம் பாடலாக வைக்கப்பட் டுள்ளது. என்னே மூடநம்பிக்கை!

உடல் (உருவம்) இல்லாதது எனப் பொருள் தரும் அசரீரி எனும் வடசொல் விண்ணிலிருந்து ஒலிக்கும் குரல் எனும் நம்பிக்கை உண்டு. இதனை அசரீரி என்றே மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. (மணிமேகலை 16:43-44 வரிகள்). 'ஒரு குரல்' எனக் கூறுகிறது சிலப்பதிகாரம். ஆதிரையின் கணவன் சாதுவன் கப்பல் கவிழ்ந்து மாண்டதை அசரீரி கூறியது என மணிமேகலை கூறுகிறது. தன் கணவன் கோவலன் கள்வனா எனக் கண்ணகி கேட்டபோது அதற்கு மறுமொழியாக ஒரு குரல் விண்ணிலிருந்து ஒலித்தது எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இத்தகைய அசரீரி வாக்குக்குக் காரணியாக சூரியனை சிலப்பதிகாரம் குறிப்பிடு கிறது. ஆனால் மணிமேகலையோ ஆகாய வாணியைக் குறிப்பிடுகிறது. புளுகுகளில்கூட ஓர்மை இல்லையே என்பதை உணர வேண்டும்.

### நாளும் கோளும்

"நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை" என்பது பழமொழி. "நாள் என்ன செய்யும்? கோள் என்ன செய்யும்?" என்று உரங்கொண்ட மனதுடன் ஒருவன் பாடியதும் உண்டு. "நாள் செய்வதை நல்லோர் செய்யார்" என்று விலா ஒடிந்த ஒருவன் கூறியதும் இங்கு உலவுகிறது. ஆனாலும் 'தொல்காப்பியம்' இதிலும் தன் பதிவுகளைக் காட்டியுள்ளது.

*சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்*
*பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்...*

என்று பொருள் அதிகாரம் 88 கூறுகிறது. அந்தப் பாடலிலேயே "அச்சமும் உவகையும் எச்சம் இன்றி, நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" என்றும் கூறப்படுகிறது. நல்விழாக்கள் போன்றவற்றை நாள் நட்சத்திரம் பார்த்து நடத்தியிருக்கிறார்கள் தமிழர்கள். நிலத்தில் வேளாண்மை செய்வதற்கும்கூட நாள் பார்த்துச் செய்தார்கள் என்பதைப் புறநானூற்றுப் பாடல் 168 கூறுகிறது. அவ்வழக்கங்கள் பல தமிழரிடையே இன்றும் நிலவி வருகின்றன.

நிலத்தில் விதைப்பதற்கே நாளும் கோளும் பார்த்தவர்கள் திருமணம் முதலியவற்றைச் செய்திட நாள் பார்க்காமல் இருப்பார்களா? நாள் பார்த்துத்தான் நிமித்தம் பார்த்துத்தான் திருமணங்கள் நடத்தப்பட்டன என்பதை அகநானூறு பாடல் 136 கூறுகிறது.

*புள்ளுப்புணர்ந்து இனியவாகத் தொள்ளொலி*
*அங்கணிருவிசம்பு விளங்கத் திங்கட்*
*சகடமண்டிய துகள்தீர் கூட்டத்துக்*
*கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்*
*படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ*
*வதுவை மண்ணிய மகளிர்...*

என்பது அப்பாடல். உரோகிணி நட்சத்திரமும் சந்திரனும் கூடிய நாள்தான் திருமணத்திற்கான நல்ல நாளாம். பழங்கதைப்படி 27 நட்சத்திரங் களும் சந்திரனின் மனைவியர் ஆவர். அவற்றில் ரோகிணி நட்சத்திரத்திடம் மட்டும் சந்திரனுக்குக் கூடுதல் பிரியமாம். இதனால் பொறாமைப்பட்ட மற்றைய மனைவி நட்சத்திரங்கள் தங்கள் தந்தை தட்சனிடம் புகார் கூறவே அவரும் மருமகனை (சந்திரனை)க் கண்டித்து 27 மனைவிகளிடமும் பாகுபாடு இல்லாமல் நடக்குமாறு கண்டிப்பான அறிவுரை கூறினாராம். அப்படியும் சந்திரன் திருந்தாமல் இருக்கவே, சந்திரனுக்குச் சாபம் இட்டதாம் தட்சன். அதன்படிதான், வளர்பிறை தேய்பிறை ஏற்படுகிறதாம். அறிவியலுக்குப் புறம்பான இப்புளுகுக் கதையின் அடிப்படையில் சந்திரனும் ரோகிணியும் இணையும் நாளை வாழ்க்கை இணையேற்புக்குரிய நாளாகக் கொண்டனர். தமிழர் என்பது பெருமைக் குரியதா? இப்படிப்பட்ட நாளைத் தேர்ந்தெடுத்துதான் கோவலன் கண்ணகியை மாமுது பார்ப்பான் காட்டிய வழிப்படி தீவலம் வந்து வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டான். என்ன நடந்தது? மனைவியைப் பிரிந்து மாதவியுடன் கூடிப் பின்னர் கொலையுண்டு இறந்துபோனான் என்கிறது சிலப்பதிகாரம்! நாள் பார்த்து நடந்தது என்ன ஆயிற்று என்ற சிந்தனை தமிழர்க்கு வரவில்லையே!

நல்ல நாள் எது என்பதைப் பார்ப்பனரைக் கேட்டுச் செயல்பட வேண்டுமென ஆசாரக் கோவை கூறுகிறது.

*அட்டமியும் ஏனை உவாவும் பதினான்கும்*
*அப்பூமி காப்பார்க்குறு கண்ணுமிக்க*
*நிலந்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை*
*பார்ப்பார்*
*இலங்கு நூல் ஓதாதநாள்*

(பாடல் 27) என்று திட்டவட்டமாகக் கூறி விட்டது. இது மாதிரியே 'சிறுபஞ்சமூலம்' பாடல் 42 கூறும்.

ஆண்டவனாலேயே அனைத்தும் ஆக்கப் பட்டன எனும் தத்துவமும் அனைத்தும் அதனால் ஆட்டுவிக்கப்படுகின்றன எனும் தத்துவமும் சரி என்றால், எல்லா நாள்களும் நல்ல நாளாகத்தானே இருக்க வேண்டும்? மாறானதாக இருக்கும் என்றால் ஆண்டவனின் அதிகாரம் செல்லுபடியாகாத நிலை என்றுதானே பொருள்? இந்தக் கேள்விகள் எதையும் எழுப்பாமல் மவுனமாக மவுடீகத்தில் இருந்து வருகின்றனர் இன்றளவும் தமிழர்கள்.

### பல் பிறப்பும் எழு பிறப்பும்

அவரவர் வினைப்படி பிறவிகள் அமைக்கப்படுகின்றன என்பது பிறவிக் கொள்கையின் தத்துவம். பிறப்பு பல என்பதைத் தமிழர் கொண்டிருந்தாலும் ஏனைய உலகப் பெருமதங்களான யூதம், கிறித்துவம், இசுலாம் முதலியவை அதை ஏற்கவில்லை இந்தியா எனும் நிலப்பரப்புக்குரிய மதங்கள் அந்த மண்ணில் தோன்றிய மதங்கள் எனப்படும். இந்து, சமண, பவுத்த, சீக்கிய மதங்கள் போன்றவற்றில் மட்டுமே இக் கொள்கை உள்ளது.

*இறந்த பிறப்பினெய்தியவெல்லாம்*
*பிறந்த பிறப்பிற்காளாயோ நீ...*

என்று சிலப்பதிகாரம் பாடுகிறது. இதே கொள்கைதனைப் புறநானூற்றுப் பாடல் 174, அகநானூற்றுப் பாடல் 66 கூறிச் செல்கின்றன. மறுபிறவி மானுடப் பிறவியாகத்தான் இருக்க வேண்டும் என்பது கிடையாதாம். புழுவாகவோ, பூச்சியாகவோகூடப் பிறக்கலாம் என்பதைக்கூட நற்றிணை 397ஆம் பாடல்,

*சாதலஞ்சேனஞ்சுவல் சாவிற்*
*பிறப்புப் பிறிதாகுவதாயின்*
*மறக்குவேன் கொல்லேன் காதலனெனவே*

எனக் கூறுகிறது.

முற்பிறப்பு, மறுபிறப்பு, பல்பிறப்பு, எழு பிறப்பு என்றெல்லாம் தமிழ் இலக்கியங்களில் சொல்லாடல்கள் உள்ளன.

*ஏழுபிறப்பும் தீயவைதீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்*

என்பது திருக்குறள் (62). எழு பிறப்புகள் இன்னின்ன என்று எந்தவொரு நூலும் பட்டியலிட வில்லை. இந்த மானுடப் பிறப்பு எத்தனையாவது பிறப்பு என்றும் ஒருவரும் கூறவில்லை. அவர்களே அறியாத ஒன்றை அவர்கள் எப்படி விளக்க முடியும் என்ற கேள்வி எழுந்தால் சரியே! எழு பிறப்பு என்று வள்ளுவர் எப்படிக் கூறியிருக்கக் கூடும் என எண்ணினால் நம் உறவுமுறைப் பெயர்கள் ஏழு என்பதாக இருப்பதால் இப்படிக் கருதலாம். நமது வழித்தோன்றல்கள் (வாரிசுகள்) ஏழு உறவுப் பெயர்களால் சுட்டப்படுகின்றனர் அல்லவா? மகன், பேரன், கொள்ளுப்பேரன் (அல்லது மகள், பெயர்த்தி, கொள்ளுப் பெயர்த்தி) என நமக்கு வழித்தோன்றல்கள். அதைப் போலவே நாம் நமது தந்தைக்கு, தாத்தாவுக்கு, கொள்ளுத் தாத்தாவுக்கு வழித்தோன்றல்களாக அமை கிறோம். எனவே, நம்மை நடுவில் இருத்தி நமக்கு முன் வாரிசுகள் மூன்று, நமக்குப் பின் வாரிசுகள் மூன்று ஆகக் கூடுதல் ஏழுபேர் - ஏழு பிறப்புகள். இதே மாதிரி உறவுப் பெயர்கள் பிறமொழி களிலும் உண்டு. எனவே, ஏழு பிறப்பும் ஏமாப் புடைத்து எனும்போது இந்தத் தலைமுறை யினரைக் குறிப்பது என்றே கொள்ளலாம்.

முக்தி என வடமொழியிலும் வீடுபேறு என்று தமிழிலும் கூறப்படுவதைப் பல தமிழ் இலக்கியங்கள் கூறினாலும் திருக்குறள் அதனைப் பாடவில்லை. அறம், பொருள், இன்பம் என முப்பாலோடு நிறுத்தி அதற்கு அப்பால் போகாதவர் திருவள்ளுவர்! வீடுபேறு என்பதையோ, துறக்கம் (சுவர்க்கம்), நிரையம் (நரகம்) என்பவற்றைக் கண்டவர் எவருமிலர். காணாததைக் கண்டவர் போலப் பலர் கதையளந்தனர். அந்தப் பட்டியலில் இடம் பெறத் திருவள்ளுவர் மனந்தரவில்லை போலும்.

இத்தனைப் பிறவிகள்தான் ஓர் உயிர் எடுக்க உச்சவரம்பு என்று எந்த மதமும் கூறவில்லை. சுவர்க்கத்தில் இடம் பெறவோ நரகத்தில் உழலவோ இத்தனைப் பிறவிகளை முடித்திருக்க வேண்டும் என்கிற விதி இல்லாத நிலையில், இனிப் பிறவாமை எனும் முக்தி எப்படிக் கிட்டும்? எப்போது கிட்டும்? இதற்கு வள்ளுவர் நீங்கிய மற்றைய இலக்கிய கர்த்தாக்கள் மறுமொழியோ, விளக்கமோ தரவில்லை. ஆனால் இனிப் பிறவாமை வேண்டும் எனும் பல்லவியைப் பலபேரும் பாடிக்கொண்டே இப்பிறவியைத் துய்த்திருந்திருக்கின்றனர். இந்நிலையில் ஒருவர் முக்தியை மிகச் சுலபமாக அடையும் வழியைப் பாடிவிட்டார்.

*ஆரூரில் பிறக்க முக்தி – காசியில்*
*இறக்க முக்தி – தில்லையைக்*
*காண முக்தி – எல்லையிற் பெரிதாம்*
*அருணையை நினைக்கவெய்தலால் முக்தி*

என்றே கூறிவிட்டார். திருவாரூரில் பிறந்தவர்கள், காசியில் இறந்தவர்கள், சிதம்பரத்தைக் கண்ட வர்கள், திருவண்ணாமலையை நினைத்தவர்கள் என யாவர்க்கும் முக்தி கிடைக்கும் என்றே சொல்லிவிட்டார். அதனால்தான் பலரும் காசிக்குப் போன இடத்தில் கங்கை ஆற்றில் மூழ்கிச் செத்துப் போனால் கவலைப்படு வதில்லை!

**தாலி**

அழகுக்கு அணிகளை அணிவது என்று ஒரு பழக்கம். அந்த வகையில் புலிப்பல் தாலி அல்லது அய்ம்படைத் தாலி அணிந்து சிறுவர் விளங்கினர். அழகுக்கு என்பதைவிட இயற்கைக் கூறுகளினால் ஏற்படும் ஊறுகளிலிருந்து காத்துக் கொள்ளவே அணியப்பட்டது என்பதே பொருத்தமாகும்.

புலிப்பல் தாலி என்பது புலியின் பல்லைக் கோத்துச் செய்யப்பட்ட அணி என்று உரையாசிரியர் உ.வே.சாமிநாதய்யர் கூறுகிறார். “புறநானூறு மூலமும் பழைய உரையும்” எனும் நூலில் இவ்வாறு எழுதிய இவரே “குறுந்தொகை மூலமும் உரையும்” எனும் நூலில் எழுதும்போது “புலிப்பல் தாலியைத் திருமணத்தாலி எனக் குறிப்பிடுவாரும் உளர்” என எழுதியுள்ளார். அப்படிக் குறிப்பிடப் படுவார் இவர் மட்டுமே. ஏனெனில் தமிழர் திருமணத்தில் தாலி அணிவிக்கப்படும் சடங்கு இடம் பெற்றதாக இலக்கியங்களில் தடயமே இல்லை. பழங்கதையான (புராணம்) கந்த புராணத்தில்தான் முதன்முதலில் தாலி கட்டப்பட்ட செய்தி பேசப்படுகிறது. முருகன் தெய்வானையை மணந்ததாகக் கூறப்படும் கதையில் தெய்வானை கழுத்தில் முருகன் தாலி கட்டியதாகப் புராணம் எழுதிய கச்சியப்ப சிவாச்சாரிதான் எழுதியுள்ளார். புராணம் கட்டுக்கதை என்பதும் கடவுளுக்கே கல்யாணம் என்பது பெருங் கட்டுக்கதை என்பதும் அனைவரும் அறிந்ததே. கந்தபுராணம் 11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. “இந்தப் புளுகு கந்தபுராணத்திலும் இல்லை” எனும் வழக்குச் சொல் இதன் ‘பெருமை’யைப் பறைசாற்றும். இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் கோவலன்-கண்ணகி திருமணம் விவரிக்கப்படுகிறது. பார்ப்பனப் புரோகிதரின் மறைவழி, தீவலம் வரும் (சப்தபதி) சடங்கு முதலியவை விவரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தாலி கட்டியது பற்றி ஏதும் குறிப்பு இல்லை. மேலும், கோவலன் இறந்த செய்தி கேட்டவுடன் அமங்கலச் சடங்காகக் கண்ணகி தன் கை வளையல்களை உடைத்ததுதுதான் பாடப்பட்டதே தவிர தாலி அகற்றல் பற்றிய பேச்சே இல்லை. எனவே தாலிகட்டுப் பற்றி உ.வே.சா. எழுதியமை வலிந்து திணித்தலே! காரணமும் வெளிப்படையானதுதான்!

**தமிழர் திருமணத்தில்**
**தாலி அணிவிக்கப்படும் சடங்கு இடம் பெற்றதாக இலக்கியங்களில் தடயமே இல்லை. பழங்கதையான (புராணம்) கந்தபுராணத்தில்தான் முதன்முதலில் தாலி கட்டப்பட்ட செய்தி பேசப்படுகிறது.**

புலிப்பல்லைச் சிறுவர் அணிந்திருந்தனர் என்பதை குறுந்தொகை 161ஆம் பாடல் “புலிப்பற்றாலி புதல்வர் புல்லி” எனக் குறிப்பிடு கிறது. அகநானூறு பாடல் 7 சிறுமியர் புலிப்பல் தாலி அணிந்திருந்ததைப் பின்வருமாறு பாடு கிறது.

*சின்னொடு வினவல் கேளாய் பொன்னொடு*
*புலிப்பற்கோத்த புலம்பு மணித்தாலி*
*ஒலிக் குழைச் செலவையுடை மாணல்குல்*
*ஆய்சனைப் பாலவின் மேய்கலை யுதிர்த்த*
*துய்த்தலை வெண்காழ் பெறுஉம்*
*கற்கெழு சிறுகுடிக்கானவன் மகளே.*

காட்டில் வசித்த மக்களிடையே இப்பழக்கம் பெரிதும் விளங்கி வந்துள்ளது.

அய்ம்படைத்தாலி என்பது சிறுவர்களின் கழுத்திலணியும் ஓர் அணி எனப் “புறநானூறும் பழைய உரையும்” எனும் நூலில் உ.வே.சா. கூறுகிறார். குழந்தைகளின் காவலுக்காகக் கழுத்தில் பூட்டிய இது, திருமால் எனும் கடவுளுடைய அய்ந்து ஆயுதங்கள் போலப் பொன்னாற் செய்யப்பட்டது என்று அவரே “மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்” நூலில் குறித்துள்ளார். திருமால் என்பது காத்தற் கடவுளாம்: படைத்தல், பிரம்மா எனும் கடவுளின் தொழிலாம்; அழித்தல் சிவன் எனும் கடவுளின் தொழிலாம். மூன்று முதன்மைக் கடவுள்களின் தொழில் பிரிவு இவை என்பது இந்துமதம். அதன்படி, திருமாலின் ஆயுதங்கள் சங்கு, சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் எனும்

**வீரத்தையும் நன்னெறிகளையும் போற்றுவதற்காக நடப்பட்ட கல் நாளடைவில் தெய்வமாக ஆக்கப்பட்டது. தெய்வங்கள் எந்தெந்த வகைகளில் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கு சக்திகள் எப்படியெல்லாம் கற்பிக்கப்பட்டன என்பதற்கு நடுகல்லே, கல்லுப் போன்ற சான்றாகும்.**

அய்ந்தாம். இந்தப் பஞ்சாயுதங்களை "குழந்தை பிறந்த அய்ந்தாம் நாளில் பிள்ளைகளுக்குத் தாரணம் செய்தல் மரபாம். இதற்கான விதிகள் 'க்ருஹியரத்னம்' எனும் நூலில் உள்ளனவாம். இதுதான் அய்ம்படைத்தாலி என்றும் உ.வே.சா. கூறுகிறார். பஞ்சாயுதம் (அய்ந்து கருவிகள்) தாரணம் (உறுதி செய்தல்) க்ருஹிய ரத்னம் ஆகியவை தமிழ்ச் சொற்கள் அன்று; வடமொழிச் சொற்கள். எனவே இப் பழக்கமும் வடமொழியாளர்க்கே உரியவை. தமிழர் மீது திணிக்கப்பட்டுள்ளது.

### பலியிடுதல்

தம்மீதோ, தம் குடும்பத்தினர் மீதோ கோபம் கொண்டிருக்கும் தெய்வத்தை அமைதிப் படுத்த அதற்குப் பலியிடும் பழக்கம் தமிழரிடையே இருக்கிறது. உயிர்ப்பலி, மலர்ப்பலி என இருவகைப் பலி உண்டு. உயிர்ப்பலியில் பொதுவாக மறி (ஆடு) இடம் பெறுகிறது. இதனை நற்றிணைப் பாடல் 47 தெரிவிக்கிறது.

*அணங்கறி கழங்கிற் கோட்டங்*
*காட்டிவெறியென உணர்ந்த வுள்ளமொடு*
*மறியறுத்து அன்னை யயருமுருகுநின்*
*பொன்னேர் பசலைக் குதவா மாறே*

எனும் பாடல் வரிகள் இதனைப் பறைசாற்றும். குறுந்தொகைப் பாடல் 362. அகநானூறு பாடல் 242 ஆகியவையும் சான்று பகருகின்றன. ஆட்டை வெட்டிப் பலியிட்டதோடு அதன் குருதியைத் தினையரிசியொடு தடவி மடை கொடுத்ததைகூட அகநானூறுப் பாடல் 22 பின்வருமாறு கூறுகிறது.

*முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்*
*களம் நன்கிழைத்துக் கண்ணி குட்டி*
*வளிநகர் கிலம்பப்பாடிப் பலிகொடுத்து*
*உருவச் செந்தினை குருதியொடு தூஉய்*
*முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்*

என விவரித்துக் கூறுகிறது.

பேயோட்டும் மரபும் சடங்கும் தமிழரிடை காணப்பட்டது. இன்றளவும் காணப்படுகிறது. பேயோட்டும் சடங்கு முடிந்த நிலையில் பேயை ஓட்டிய(?) பூசாரியும் பேய் பிடித்ததாகக் கருதப்பட்ட பெண்ணும் ஆடும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இப்படி ஆடினால், அந்தப் பெண்ணைப் பீடித்த நோயும் பிடித்த பேயும் அகன்றுவிட்டதாகக் கருதுவர். இதனை மதுரைக் காஞ்சி (பாடல் 611-616) எடுத்துக் காட்டும். பேயும் நோயும் பெண்டிரை மட்டுமே பிடித்து ஆட்டியது. ஆட்டுகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். ஆண்களுக்குப் பேய் பிடிப்பதில்லை. ஏன்? கருப்பை இருப்பவர் களுக்கு மட்டுமே ஏற்படும் ஹிஸ்டீரியா எனும் மனநோய்த் தாக்குதல்தான் பேய்பிடித்தல் என்று கூறப்படுகிறது எனும் மருத்துவ அறிவியல் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இது மூடநம்பிக்கை என்பது தெளியப்பட வேண்டும்.

### யாகங்கள்

வடமொழி யாகம், தமிழில் வேள்வி எனப்படுகிறது. தீ வளர்த்து நெய் சொரிந்து விலங்கு பலியிட்டுத் தெய்வத்தை வணங்கும் வடநூலார் முறையைத் தமிழர்கள் ஏற்றுப் பின்பற்றியுள்ளனர். இவற்றைச் செய்வதன் மூலம், தாம் விரும்பியதை அடையலாம் என்ற நம்பிக்கை குடி கொண்டுள்ளது. இந்த மூடநம்பிக்கை தமிழரிடம் இருந்தது என்பதை அகநானூறு (பாடல் 13)

*வள்வாயம்பிற் கோடைப் பொருநன்*
*பண்ணித்தைஇய பயங்கெழு வேள்வியின்*
*விழுமிது நிகழ்வதாயினும்...*

எனக் கூறுகிறது. பரிபாடல் (19) இதனையே "வேள்வியிழைகியல் விளம்புவோரும்" என்று

சுட்டிச் செல்கிறது.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை தனக்குக் குழந்தைபேறு வாய்க்க வேண்டும் என்று தன் மனைவியுடன் வேள்வி செய்தான் என்பதைப் பதிற்றுப்பத்து (பாடல் 74) பாடுகிறது.

*கேள்வி கேட்டுப் படிவமொடியாது*
*வேள்வி வேட்டனையுயர்ந்தோ ருவப்ப*

.................................................................................

*ஒடுங்கீரோதி யொண்ணுதல் கருவில்*
*எண்ணியல் முற்றியீரறிவு புரிந்து*
*சால்புஞ் செம்மையுமுளப்படப் பிறவுங்*
*காவற்கமைந்த அரசு துறை போகிய*
*வீறுசால் புதல்வற் பெற்றனை*

என்று பாடி வேள்வியின் விளைவாகப் புதல்வனைப் பெற்றாள் என்பதைக் கூறுகிறது. கணவனும் மனைவியும் உடல் உறவு கொண்டு பிள்ளை பெற்றனரா எனும் விளக்கம் இதில் இல்லை. வெறும் வேள்வியே கருவைத் தந்ததா? எனும் அய்யத்திற்கும் விடையில்லை.

வேள்வி செய்தால், சுவர்க்கம் போகலாம் எனும் நம்பிக்கையும் நிலவி இருந்ததை மதுரைக் காஞ்சி "ஆவுதி மண்ணிஅவிர்துகில் முடித்து, மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல" எனக் கூறுகிறது. சுவர்க்க மோசடிக்கு மற்றொரு மோசடி வழிகாட்டுகிறது.

வேள்வியைச் செய்யும் அந்தணர்க்குத் தானமும் கபிலநிறப் பசுவும் அளிக்கப்படல் வேண்டும் என்பது வழக்கமாக இருந்துள்ளது. தொல்காப்பியமும் (பொருள் 86) புறநானூறும் (பாடல் 361) இதனைத் தெரிவிக்கின்றன. எனவே ஆதாயம் கருதி மூடநம்பிக்கை திணிக்கப்பட்டுள்ளது.

**நடுகல்**

சிறப்பானவர்களின் மறைவுக்குப்பின் அன்னாரது நினைவாக நடப்பட்டது நடுகல் எனப்படுகிறது. "நட்டபோலும் நடாஅ நெடுங்கல்" என்று அகநானூறு (பாடல் 269) குறித்துள்ளது. இது காலப்போக்கில் வழிபடு கல்லாக மாறிப் போனதுதான் கொடுமை. இதுவே ஆவி பற்றிய எண்ணத்திற்கும் ஆவி வழிபாட்டுக்கும் வழிகோலிவிட்டது என்பதைப் புகழ்பெற்ற சமூகவியல் அறிஞர் பிரேசர் கூறுவார்.

ஆண்களுக்கு மட்டுமே நடுகல் நடப்பட்டது. அது அவர்களின் வீரத்தின் நினைவாக எனவும் கூறப்பட்டது. பெண்களுக்கும் நடுகல் என்ற வழக்கம் சிலப்பதிகாரத்தில்தான் காணப்படுகிறது. நாளடைவில் நடுகல் வழிபாட்டு முறை வந்து சேர்ந்தது. இதனை அகநானூறு பாடல் 35 குறித்துள்ளது.

*நடுகற் பீலிசூட்டித் துடிப்படுத்து*

என்பது இதனைக் குறிக்கும்.

*பூலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்*

என அகநானூறு 67ஆம் பாடல் வரி வழி மொழிகிறது.

*நடுங்கற் பீலிசூட்டி நாரரீ,*
*சிறுகலத்துகுப்பவுங்*
*கொள்வன் கொல்லோ*

என்ற புறநானூற்று (பாடல் 232) வரிகள் இதை உறுதிப்படுத்தும்.

தமிழர் பழக்கத்தில் தெய்வவழிபாடு நெல்லும் மலரும் கொண்டு நிகழ்த்தப் பெற்றது. அதே முறை நடுகல் வழிபாட்டிலும் கைக் கொள்ளப்பட்டமை புறநானூறு (பாடல் 355), அகநானூறு (பாடல் 343) ஆகியவற்றால் அறியலாம். பெண் ஒருத்தி இல்லறத்தை இன்பமாக்கிட வேண்டி நடுகல்லைக் கும்பிட்ட செய்தியைப் புறநானூறு பாடல் 306 கூறுகிறது.

நடுகல்லைத் தொழுதால் மழைபெய்யும் எனும் நம்பிக்கைக்கூட இருந்துள்ளது. இதனைப் புறநானூறு பாடல் 263 குறிப்பிடுகிறது.

வீரத்தையும் நன்னெறிகளையும் போற்றுவதற்காக நடப்பட்ட கல் நாளடைவில் தெய்வமாக ஆக்கப்பட்டதை அறியலாம். தெய்வங்கள் எந்தெந்த வகைகளில் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கு சக்திகள் எப்படியெல்லாம் கற்பிக்கப்பட்டன என்பதற்கு நடுகல்லே, கல்லுப் போன்ற சான்றாகும்.

'விழிகள் பதிப்பகம்' வெளியிட்ட
'திராவிடர் கழகம் கட்சி அல்ல; ஒரு புரட்சி இயக்கமே'
என்ற நூலிலிருந்து

# இசையிலும் 'இந்துத்துவா' வெறி

*ஓ.எஸ். அருண் என்ற கர்னாடக இசைக் கலைஞர் ஏசுவின் புகழ் பாடும் கிறிஸ்தவப் பாடலைப் பாட முயன்றதற்கு பார்ப்பனர்கள் மிரட்ட - பாடகர் நிகழ்ச்சியையே இரத்து செய்து விட்டார்*

ஆரம்பப் புள்ளி, பாடகர் ஓ.எஸ்.அருண். 'இயேசுவின் சங்கம சங்கீதம்' என்ற பெயரில் ஆகஸ்ட் 25-ம் தேதி 'பல நூற்றாண்டுகளைக் கடந்த காலத்தால் அழியாத கிறிஸ்துவ கீர்த்தனைகள் ஓ.எஸ்.அருணின் உள்ளம் உருக்கும் குரலில்' என்ற போஸ்டர், சமூக ஊடகங்களில் வெளியானது. உடனே கொதித் தெழுந்தார்கள் இந்துமதப் பாதுகாவலர்களாக தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் 'கலாச்சார தாதாக்கள்'. 'கிறித்துவ அமைப்புக்காக என்னமா பாடப்போச்சு' என்று அருணை வசை பாடினார்கள். 'பணத்துக்காக எது வேண்டுமானாலும் செய்யறதா?' என்று தூற்றினார்கள்.

நமக்கேன் வம்பு என்று குடும்ப நிர்ப்பந்தங்களைக் காரணமாகச் சொல்லி கச்சேரியை ரத்துசெய்வதாக அறிவித்தார் ஓ.எஸ்.அருண். நியாயமாக அத்துடன் முடிந்திருக்க வேண்டிய பிரச்னை, மேலும் விஸ்வரூபம் எடுத்தது. 'இப்போது ரத்துசெய்வது இருக்கட்டும்.. அந்தக் கச்சேரியை முதலில் ஏன் ஒப்புக்கொண்டீர்கள்?' என்று பிலுபிலுவென்று பிடித்துக்கொண்டு பாடகரைக் காய்ச்சி எடுத்தார்கள், சமூக வலைதளப் போராளிகள். இப்படியொரு சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்ததுபோல் நிறையப் பேர் களத்தில் குதித்து தர்ம அடி கொடுத்தார்கள்.

அருணுக்கு வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றின் பதிவு சமூக வலைதளங்கள் சிலவற்றில் பதிவானது. மறுமுனையில், கோயமுத்தூரிலிருந்து இராஷ்ட்ரிய சனாதன சேவா சங்கத்தின் (ஆர்எஸ்எஸ்எஸ்) தலைவர் ராமநாதன். 25ஆம் தேதி கச்சேரியைப் பற்றிக் கேட்கிறார்.

''இந்து சனாதன தர்மம், எல்லா மதங்களையும் சமமா பாவிக்கணும்னு சொல்லியிருக்கு...'' என்கிறார் ஓ.எஸ்.அருண்.

''ஒரு இந்துவா இருந்துண்டு கிறிஸ்துவப் பாடல்களைப் பாடறது எந்த விதத்துல நியாயம்?'' என்று கேட்கிறார் ராமநாதன்.

''அந்தக் கச்சேரியை கேன்சல் பண்ணியாச்சே.. சமூகம் அதுக்கு அங்கீகாரம் கொடுக்கலேன்னு தெரிஞ்சவுடனே அதை ரத்து செய்துட்டேன்...''

''சமூக அங்கீகாரம் இருக்கட்டும்... உங்க மனசாட்சிப்படி நீங்க செயல்பட வேண்டாமா? 'நான் ராஜாவைப் பாட மாட்டேன்.. ராமனை மட்டும்தான் பாடுவேன்'னு சொன்ன தியாக ராஜரோட பாடல்களை வெச்சு நீங்க எல்லாம் வியாபாரம் பண்றீங்க... பணம் சம்பாதிக்க எங்கே வேணும்னாலும் பாடுவீங்களா?''

''இல்லீங்க... இந்தக் கச்சேரியை நான் இலவசமாத்தான் பாடறதா இருந்தேன்.''

உரையாடல் தொடர்கிறது. தன்னுடைய 'ஆலாபனா' அறக்கட்டளை மூலம், தான் செய்து வரும் சமூக சேவைகளை விளக்குகிறார் அருண். பாம்பே ஜெயஸ்ரீ, நித்யஸ்ரீ மாதிரியானவர்கள் கிறிஸ்துவப் பாடல்கள் பாடிவருவதையும் குறிப்பிடுகிறார்.

''ஓ... அப்போ அவங்க எல்லோரையும் கூப்பிட்டுக் கண்டிச்சுட்டு வர்றேன்...''

''டி.எம்.கிருஷ்ணா பெரிய பாடகர்... அவர் சர்ச்சுக்குள்ளே போய்ப் பாடியிருக்கிறார்...''

''அந்தப் பொறுக்கியோட நம்பர் கொடுங்க... அவன்கிட்டே பேசறேன்... அவன் கச்சேரி எங்கேயும் நடக்கவிடாம செய்துடறேன்...''

புல்லுருவி, பச்சோந்தி என்று அடை மொழிகள் வேறு! இப்படி அநாகரிகமாகவும், மரியாதை இல்லாமலும் பேசக்கூடிய ஒருவர், சனாதன சேவா என்று பெயர்கொண்ட சங்கத்துக்குத் தலைவராக இருப்பதை என்னவென்பது? சமூக வலைதளங் களில் காரசாரமான, நீண்ட பதிவுகளின் மூலம் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்தவர்கள் ஒருபுறமிருக்க, கர்னாடக இசைக் கலைஞர்களில் ஒரு சிலர் தங்கள் தரப்பை முன்வைத்ததையும் பார்க்க முடிந்தது.

எந்தவித உள்நோக்கமும் இல்லாமல் தான்

பாடியதாகவும், இதனால் யார் மனதாவது புண்பட்டிருந்தால் அதற்காகத் தான் வருந்து வதாகவும் குறிப்பிட்டிருந்தார் நித்யஸ்ரீ. இவரை ஃபேஸ்புக்கில் ஒருவர் கேவலமாக விமர்சனம் செய்திருந்தது பண்பாடற்ற நிலையின் உச்சம்!

'சமான எவரு பிரபு...' என்று எப்போதோ சங்கராபரணம் ராகத்தில் நித்யஸ்ரீ பாடியிருப்பதை, தியாகராஜரின் கரகரப்ரியா ராக கீர்த்தனையை (ராமநீசமான..) வார்த்தை மாற்றிப் பாடிவிட்டதாக ஒரு சிலர் எழுதியது உளறலின் உச்சம்.

'கலைஞர்களைச் சிலுவையில் அறையாதீர்கள்...' என்று தன் பதிவினை ஆரம்பித்திருந்தார் சித்ரவீணை ரவிகிரண். 1900-களில் உஸ்தாது அப்துல் கரீம்கான் என்பவர் 'ராமநீ சமானம் எவரு' பாடலைப் பாடியிருப்பதை வீடியோ ஆதாரத்துடன் வெளியிட்டிருந்தார் இவர். தவிர, விஸ்கான்சின் சேம்பர் இசைக் குழுவுடன் நிகழ்ந்த தனது சமீபத்தியக் கூட்டு முயற்சியில் 45 கிறிஸ்துவ / யூதர் சமூகத்தினர் சிவன் மீதும், பார்வதி மீதும் இயற்றப்பட்ட பாடல்களை இசைத்ததையும், அவற்றை 45,000 ரசிகர்கள் கேட்டு மகிழ்ந்ததையும் குறிப்பிட்டிருந்தார். இதற்கும் வீடியோ ஆதாரம் பதிவிட்டிருந்தார்.

''வேற்று மதத்தினர் யாராவது நமது கர்னாடக இசைப் பாடல்களைப் பாடுகிறார்களா?'' என்றும் 'நாலும் தெரிந்த' சிலர் கேட்பதற்கு ரவிகிரணனின் பதிலடி சரியான சாட்டையடி!

பல வருடங்களுக்கு முன்பு ஏ.மோஸஸ் என்பவரின் இசையமைப்பில் பாம்பே ஜெயஸ்ரீ பாடியிருக்கும் தமிழ் கிறிஸ்துவப் பாடலை யூ-டியூபில் தேடிப் பிடித்துக் கேட்டேன்.

'என் விளக்கு சுடர்விட்டு
எரியச் செய்கின்றீர்
என் வாழ்வை அகல் விளக்காய்
இறைவா மாற்றினீர்
புனிதம் மிகுந்த
உமது பெயரை
நானும் புகழ்ந்து பாடுவேன்..
போற்றி இறைவா
போற்றி என்று
நாளும் போற்றிப் பாடுவேன்...'

இந்தக் கவிதை வரிகளில் எந்த ஒரு மதக் கடவுளையும் குறிப்பிட்டுப் பாடுவதாக இல்லை என்று யாரும் ஒப்புக்கொள்வார்கள்.

சென்னை டிசம்பர் இசை விழாவில் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் தினத்தன்று வயலின் மேதை டி.என்.கிருஷ்ண னின் கச்சேரி நடப்பதும், அதில் நடுவே அவர் கிறிஸ்துவப் பண்டிகைக்கே உரித்தான 'ஜிங்கிள் பெல்ஸ்' பாடலை வாசிப்பதும் நினைவுக்கு வந்தது.

இன்னும் சற்றுப் பின்னோக்கிப் பயணிப்போம்...

தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் ஆட்சியில் அரண்மனைக் கவிஞராக இருந்தவர் வேதநாயகம் சாஸ்திரி (1774-1864). இவர் 133 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். 500 பாடல்கள் வரை புனைந்திருக்கிறார். அந்தக் காலத்திலேயே கர்நாடக ராகங்களில் தனது கிறிஸ்துவப் பாடல்களுக்கு மெட்டமைத்திருக்கிறார் என்பது வரலாறு.

அதேபோல், சாமுவேல் வேதநாயகம் பிள்ளை என்று அறியப்பட்ட மாயவரம் வேதநாயகம் பிள்ளை (1826 - 1889), 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற முதல் நவீன தமிழ் நாவலை எழுதியவர். பாடல்கள் பலவும் எழுதியவர். 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' என்று தலைப்பிட்டுத் தனது பாடல்களைத் தொகுத்தவர். இவரது பாடல்கள் இன்றும் கர்னாடக இசைக் கச்சேரிகளில் பாடப்பட்டு வருகின்றன. 'மானம் பெரிதா... வருமானம் பெரிதா' என்ற இவரது பாடல் தியாகராஜரின் 'நிதிசால சுகமா' ஸ்டைலில் அமையப் பெற்றது.

இந்த சர்ச்சைகள், எதிர்பார்த்தது போலவே பாடகர் டி.எம்.கிருஷ்ணாவை அறச் சீற்றம் கொள்ளவைத்தது. யாரும், எங்கும், எதையும் பாடலாம் என்பது அவரது கட்சி. வர்க்க சாதி பேதமின்றி அனைவரும் அதைக் கேட்க வேண்டும் என்று வாதிட்டு வருபவர் அவர். சக இசைக் கலைஞர்கள் பலரின் மீதும் புழுதி வாரித் தூற்றியதை வன்மையாகக் கண்டித்த கிருஷ்ணா, ''இனி நான் மாதம் ஒரு முறை கிறிஸ்துவ, இஸ்லாமியப் பாடல் பாடப்போகிறேன்...'' என்று 'யார் என்ன செய்யறாங்க பார்த்துடலாம்' என்கிற தொனியில் கூறியிருக்கிறார். சொன்னதைச் செய்தும் காட்டக் கூடியவர் இவர்!

ஆக, என்ன கவி யார் பாடினாலும் அதில் விஞ்சி நிற்பது இறை உணர்வு மட்டுமே. ராமனையும் கிருஷ்ணனையும் பாடிய வாயால் இயேசுவையும் அல்லாவையும் பாடினால் நாக்கு அழுகிவிடாது. மேலும், கலைஞனுக்கும் இறைவனுக்கும் குறுக்கே நிற்க எவருக்கும் அதிகாரம் இல்லை!

**– இசை விமர்சகர் 'வீயெஸ்வி' 'இந்து'வில் எழுதிய கட்டுரை**

## வாசகர்களிடமிருந்து...




'**த**லித் வீரர்களைப் புறக்கணிக்கும் கிரிக்கெட் பார்ப்பனியம்' கட்டுரை மிகவும் சிறப்பு. "பூனா கிரிக்கெட் சங்கத்தில் 100 மணி நேரம் பந்து வீசியும், ஒரு முறைகூட மட்டை வீச வாய்ப்பு அளிக்கப்படவில்லை. தண்ணீர் அருந்துவதற்கும் தனிக் குவளை தந்தார்கள்" என்று தலித் கிரிக்கெட் வீரர் பல்வன்கர் பாலூ, தன் மகனிடம் கூறியிருந்த செய்தியைப் படித்தபோது கண்ணீர் வந்தது. தென்னாப்பிரிக்காவில் கறுப்பின வீரர்களுக்கு கிரிக்கெட்டில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பது போல் ஏன் இந்தியாவிலும் 'தலித்' வீரர்களுக்கு வழங்கக் கூடாது? இதே கருத்தை வலியுறுத்தி 'இந்து' ஆங்கில நாளேட்டின் ஞாயிறு மலரில் (ஆகஸ்ட் 12, 2018) ஒருவர் கட்டுரை எழுதியுள்ளார்.

"கிரிக்கெட்டில் இடஒதுக்கீடு வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்பு நான் எழுதிய கட்டுரைக்கு கடும் எதிர்ப்புகள் வந்தன. இந்தியாவில் 27 சதவீத மக்கள் இப்போதும் தீண்டாமையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று 'மனித வளமேம்பாட்டுத்' துறை நடத்திய ஆய்வு கூறுகிறது. இந்தியாவில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு ஆண் தலித் கூட இதுவரை விளையாடவில்லை. பழங்குடியினப் பிரிவினரும் விளையாடிய தில்லை. அதே நேரத்தில் நிறவெறிக் கொள்கையில் ஊறிப் போய் நிற்கும் அமெரிக்காவில் விளையாட்டுத் துறையில் ஆப்பிரிக்க அமெரிக்கர்களே பெருமளவு பங்கேற்று, உலகச் சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். இந்திய கிரிக்கெட்டில் இடஒதுக்கீடு கொள்கைக் காரணமாக பிற்படுத்தப்பட்டவர்கள் விளையாட வந்து விட்டார்கள். ஆனால், 'தலித்' மக்கள்தான் நுழைய முடியவில்லை. இந்திய கிரிக்கெட் பெண்கள் அணியில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அதிக இடம் பெற்றுள்ளனர். பார்ப்பன உயர்ஜாதிப் பெண்கள் விளையாட வருவதில்லை" என்று அக்கட்டுரை சுட்டிக்காட்டியிருக்கிறது.

**சங்கர், நெல்லை**

**ஜா**தி சங்க மாநாடுகளில் பெரியார் பேசியது நூலாக வெளி வந்திருப்பதை 'நிமிர்வோம்' வழியாக அறிந்து மகிழ்ந்தேன். ஆதி திராவிடர் மாநாட்டில் பேசிய பெரியார், அரசாங்கத்துக்கும் எனக்கும் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயம் இருந்தாலும் நீங்கள் அரசாங்கத்துடன் பிணக்குச் செய்யாமல், அதை (அரசாங்கத்தை) எதிர்க்காமல் இருந்து, உங்கள் சமூக நன்மையைப் பெறவேண்டும்" என்று பேசியிருப்பது ஆதி திராவிடர் உரிமையில் எவ்வளவு உள்ளார்ந்த உணர்வு காட்டியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அப்படிப்பட்ட கருத்துகளை பெரியார் ஒருவரால் மட்டுமே பேச முடியும். பெரியார் இடைநிலைச் சாதியினரின் ஜாதிப் பெருமையை அவர்கள் மாநாட்டிலேயே கண்டித்திருப்பதைப் படிக்கும்போது அவரை இடைநிலை ஜாதி ஆதரவாளராக இப்போதும் சிலர் கூறுவது எவ்வளவு பெரிய அபத்தம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**வினோத்,** தஞ்சை

'**அ**திகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்' கட்டுரை ஏராளமான தகவல்களைத் தந்துள்ளது. 'நிமிர்வோம்' இதழுக்கு பாராட்டுகள்!

**தமிழ் வேந்தன்,** விழுப்புரம்

**க**லைஞர் குறித்த தலையங்கம், தமிழ் இலக்கியங்களில் மூடநம்பிக்கைகள்; வேட்டி இந்து பண்பாடா? என அனைத்துக் கட்டுரைகளும் ஆழமாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் இருந்தது.

**உமா,** சேலம்



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org

ஆண்டுக் கட்டணம் ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com

# எட்டு வழிச் சாலை

**வே.ராமசாமி**

எவ்வளவோ சூறையாடி விட்டீர்கள்
எவ்வளவோ கொள்ளையிட்டு விட்டீர்கள்

விதைகள் முளைப்பாரி வரும் -எமது
நிலத்தை மட்டுமாவது விட்டுவிடுங்கள்

நிலத்தை விட்டுத் தூரச்செல்லுங்கள்
வரப்பில் கூட நிற்கக் கூடாது

ஆளில்லாத களத்து மேட்டில்
தானியங்களை அள்ளிச் செல்லும்
உங்களை விட்டுவிட மாட்டோம்

நாங்கள் வந்து விட்டோம்
நாங்கள் வழி மறிப்போம்

எங்கள் மலைகளைத்
துளையிட வேண்டாம்

அளவு கருவிகளை
சுருட்டிக் கொள்ளுங்கள்
எல்லைக் கற்களை
எடுத்துச் சென்று விடுங்கள்

எங்கள் ஈரக்குலையை தோண்டியெடுத்து
யாருக்குக் கொண்டு செல்கிறீர்கள் ?

இலைகளின் இதயம் படபடக்க
பச்சை மரத்தை அறுக்காதே

அன்னையைப் போன்ற தென்னையை
வெட்டிக் கொன்றுவிட்டு
என்ன தரப்போகிறாய் இழப்பீடு ?

தென்னஞ் சில்லாடைக்குக் கூட
தேறாது உன் நிவாரணத் தொகை

உழுது கொண்டு போகும்போது
மண்ணுக்குள் செல்லும் மரத்தின் வேர் தட்டி
விழுந்த நிலத்தின் பிள்ளைகள் நாங்கள்

தங்கக் கட்டிகளின் மீது – எட்டுவழி
தார்ச் சாலையை விடமாட்டோம்!






Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN